...பதிப்பு விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 மாசித் திங்கள் 24-ம் நாள் (7—3—1965) ஞாயிற்றுக்கிழமை துல்கம் 3 | இதழ் 41

# உரிமைகள் பெற வாய்ப்பு

## நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

அடுத்து வரும் பொதுத் தேர்தல் இலங்கையின் சரித்திரத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தென்னிலங்கையில் இடதுசாரிக் கோஷ்டியும், வலது சாரிக் கோஷ்டியும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மோதிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் பின்னணியில் வெளிநாட்டு வல்லரசுகளும் ஆயத்தமாக நிற்கின்றன என்பது சமீபகால சம்பவங்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரையில் இந்த அதிகாரப் போட்டியில் பங்கற்றவர்களாக, ஓர் அடிமை இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தப் போட்டியின் பயனைத் தமிழ் பேசும் இனத்தின் தலைவிதியை ஓரளவுக்காவது மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் இந்தத் தேர்தலின் பின் கிடைக்கும் என்று எதிர் பார்க்கக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இழந்துவிட்ட எமது உரிமைகளை மீண்டும் பெற வேண்டுமானால் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒரே கட்டுப்பாடான கட்சியாகத் தெரிவு செய்யப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

இவ்வருடம் மார்ச் மாதம் 22-ந் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையொட்டி இலங்கைத் தமிழரசுக்கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் மேற்கண்டவாறு கூறுகிறது. தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழுப் பகுதிகளும் கீழே தரப்படுகிறது:

நமக்குள் மாறுபட்டு மோதிக் கொள்ளும் குழுக்களாகவோ, சுயேச்சை அங்கத்தவராகவோ எமது பிரதிநிதிகள் செல்வார்களானால், 1956-ம் ஆண்டுக்கு முன்பு தனிப்பட்ட தலைவர்கள் சிலருக்குப் பதவிகளைக் கொடுத்து எமது உரிமைகள் பறிக்கப்படுவதற்கு அவர்களை உடந்தையாக்கியதுபோல, எம் இனத்தின் உரிமைகளை அளிக்காது அனுப்பப்படுவோம் என்பது உறுதி.

கடந்த 15 ஆண்டுகளாக அரும் பாடுபட்டுழைத்து வடக்கு, கிழக்கு, மலைநாடு என்ற பேதமின்றி, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்ற வேற்றுமையின்றி: உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பாகுபாடின்றித் தமிழ் பேசும் இனத்தை ஒன்றுபடுத்திய கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒன்றேயாகும். 1956-ம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்தில் ஒரு கட்டுப்பாடான குழுவாக இயங்கி, எமது உரிமை தர மறுத்த ஆட்சியினரைப் பலமுறை வீழ்த்தித் தமிழ் பேசும் இனத்தின் பலத்தை, நிலையான ஆட்சி அமைப்பதற்கு அவர்களின் ஆதரவைப் பெறவேண்டிய அவசியத்தை, சிங்கள அரசியற் கட்சிகளை உணரச் செய்திருக்கின்றது இலங்கைத் தமிழரசுக்கட்சி.

பாராளுமன்றத்திற்கு வெளியே அடுத்தடுத்து நடத்திய போராட்டங்களினாலும், கிளர்ச்சிகளினாலும் தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளை மறுத்து நிம்மதியான ஆட்சி நடாத்த முடியாது என்றும் சிங்கள மக்களுடைய சனநாயக உரிமைகளையும் பறிக்கும் அவசரகாலச் சட்டத்தின் மூலமே ஆட்சி செய்ய முடியுமென்பதையும் ஆட்சியாளரை அறியச் செய்துள்ளோம். சுருங்கக் கூறின் கரைபுரண்டோடி வந்த சிங்கள ஏகாதிபத்திய வெள்ளத்தை ஓரளவுக்கு அணை போட்டுத் தடுத்து நிறுத்தியிருப்பது தமிழரசுக் கட்சிதான்.

### ஆட்சியுரிமை

தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் அடைந்திருக்கும் அவல நிலைக்குக் காரணம் சிங்கள இனத்தை ஆளும் இனமாகவும், தமிழ் பேசும் மக்களை ஆளப்படும் மக்களாகவும் ஆக்கியிருக்கும் ஒற்றையாட்சி அமைப்பேயாகும். 16 வருட சிங்கள ஆட்சியில் தமிழ் பேசும் இனம் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு விட்டது. நாம் தொடர்ந்தும் ஒரு தனி இனமாக வாழ வேண்டு

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழரசுத் தலைவர்கள் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. நவரத்தினம், திரு செ. இராசதுரை, திரு சி. மூ. இராசமாணிக்கம் ஆகியோருக்கு பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த களுவாஞ்சிக்குடியில் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. மலர்மாலைகளைச் சூடியும் பூரணகும்பங்களை வைத்தும் பட்டாசு கொளுத்தியும் மக்கள் தலைவர்களை வரவேற்ற காட்சி.

### இ. த. அ. க. கொழும்புக் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் பொதுக் கூட்டமொன்று இத்திங்கள் 7-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு 16, அம்பிறட் கவஸ் தோட்டம், கொழும்பு-3ல் உள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறும் என்று கிளைப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## நிதி அமைச்சர் யாழ்ப்பாணம் செல்லமாட்டார்

### அ. எ. வி. ச. தலையீடே காரணம்

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் உத்தியோக பூர்வமான யாழ்ப்பாண விஜயத்தை இரத்துச் செய்ய முடிவு செய்திருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது. அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் தலையீடே இதற்குக் காரணம் என்று அந்த வட்டாரங்கள் கூறின.

புதிதாகக் கட்டப்படும் நிறைசேரிக் கட்டடத்தை திறந்து வைப்பதற்காக இம்மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாணம் செல்விருந்த நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா தமது உத்தியோக பூர்வமான இவ் விஜயத்தை நிறுத்தி வைத்துள்ளாராம். டாக்டர் பெரேரா நிதி அமைச்சர் என்ற ரீதியில் யாழ்ப்பாணத்திற்கு வந்தால் கறுப்புக்கொடி காட்டுவதாக தமிழரசு வாலிப முன்னணி முடிவு செய்திருந்தது. தமிழரசு வாலிப முன்னணியின் முடிவை ஆதரித்து தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களும் அறிக்கை விடுத்திருந்தார்கள்.

நிதி அமைச்சரின் வரவுக்கு தேசியத் தொழிற் சங்கம் என்று கூறப்படும் அரசாங்க இலிகிதர் சேவைச் சங்கம் ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனால் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களின் தொழிற்சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர் திரு. செ. கோடீசுவரன் 'நிதி அமைச்சர் இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் செல்வது விரும்பத்தக்கதல்ல' என்று பல காரணங்களைக் காட்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

தமிழரசுக் கட்சியுடன் தமிழ் அரசாங்க ஊழியர்களும் தமது யாழ்ப்பாண விஜயத்தை எதிர்க்கிறார்கள் என்பதை அறிந்ததும் நிதி அமைச்சர் தமது உத்தியோக பூர்வமான விஜயத்தை இரத்து செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அரசியற் கட்சித் தலைவர் என்ற ரீதியில் இடதுசாரி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தற் கூட்டங்களில் உரை நிகழ்த்துவதற்காக அடுத்த வாரம் டாக்டர் பெரேரா உத்தியோக ரீதியில்லாத முறையில் யாழ்ப்பாணம் செல்லலாம் என்று கூறப்படுகிறது.

### காங்கிரஸ் கூட்டத்தில் தமிழரசு வாழ்த்து

மட்டக்களப்பு ஏறாவூரில் தமிழ்க் காங்கிரஸ் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு திரு. பொன்னம்பலம் சென்றிருந்தார்.

தலைமை வகித்தவர் தமது தலைமை உரையை ஆரம்பித்

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துரையைப் பற்றியும், அவர் குடியிருக்கும் அந்த நாகரீகமான பங்களாவைப் பற்றியும் தலைமையாசிரியர் எச்சரித்து முழுசாக ஒரு நாள் கூடக் கழியவில்லை. அதற்குள் ஒரு பெரிய சோதனை போல் வந்து நின்றது அந்த வெள்ளைக்காரத் துரையின் ஜீப்.

குளித்துவிட்டு பசுமையான எண்ணங்களோடு வந்துகொண்டிருந்த கணேசனுக்கு அந்த ஜீப் ஒரு மர்மப் பொருளாகத் தென்பட்டது.

தன்னை ஏற்றிக் கொண்டு செல்வதற்காகத்தான் அந்த ஜீப் வந்திருக்கின்றதென்பதை அறிந்ததும் அவன் கொண்ட வியப்பு, அந்தப் பிராந்தியத்தில் விசும்பைத் தொட்டுக் கொண்டு நின்ற மலைகள்போல் உயர்ந்தது.

'துரையின் பங்களாவிலிருந்து பாடசாலைக்கு வந்து சிலமணி நேரங்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அப்படி நம்மோடு பேசுவதற்கு தலை போகின்ற காரியம் என்ன நேர்ந்துவிட்டது துரைக்கு?'

ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்திருந்த சாரதி, கணேசனைத் துரை அவசரமாகப் பார்ப்பதற்கு விரும்புவதாகக் கூறினனே தவிர, வேறு எதையும் விபரமாகக் கூறவில்லை.

தலைமையாசிரியரையும் வைத்துக்கொண்டு அவன் அப்படிக் கணேசனைத் துரிதப்படுத்தியது கணேசனுக்குப் பெரிய தர்ம சங்கடமாகப் போய் விட்டது.

தான் அப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருப்பதையும், இன்னும் சாப்பிடக்கூட இல்லை என்பதையும் காரணம் காட்டி, ஜீப்பைத் திருப்பிவிட முயன்றுன் கணேசன்.

சாரதி நப்புச்சுப்பான ஆசாமியாக இருக்கவில்லை. பெரிய விடாக்கண்டனாக இருந்தான். என்ன சொல்லியும் சமாளிக்க முடியாத உறுதியோடு காணப்பட்டான் அவன். துரையினுடைய அழைப்பின் வேகத்தைப் புலப்படுத்துவதாக இருந்தது அவன் காட்டிய உறுதி.

துரையினுடைய அழைப்பை வெளிப்போக்கிற்காகக் கணேசன் தட்டிக் கழிக்க முனைந்தாலும், அவனுடைய உள்ளுணர்வு அந்த அழைப்பை மௌனமாக அங்கீகரித்தது. மிக உயர்ந்த தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒருவர் சாதாரண மனிதனை தன்னை விரும்பி அழைப்பதை எண்ணியபோது கணேசனுடைய உள்ளத்தில் தன்னெடுப்பு மிகுந்தது. அந்த உணர்ச்சிப் பிரதிபலிப்பை மிகுந்த சாமர்த்தியத்தோடு அணை போட்டு நிறுத்திக் கொண்டான் அவன்.

'தலைமையாசிரியர் தடுத்தாலும், பங்களாவுக்குப் போயே தீருவது' என்ற தீர்க்கமான முடிவோடு, தலைமையாசிரியரை நோக்கினன் கணேசன். ஆனால் அப்படியொரு வில்லங்கத்தைத் தலைமையாசிரியர் அவனுக்குக் கொடுக்கவில்லை, மிக நுணுக்கமாக, பாம்புக்கும் நோகாமல் பாம்படித்துக் கம்புக்கும் நோகாமல் பிரச்சினையை 'டைசல்' செய்தார் அவர்.

பிறிதொரு சமயமாக இருந்தால் அப்படி ஆற அமரக் குளித்துவிட்டு வந்ததற்கு அரை மணித்தியாலமோ? முக்கால் மணித்தியாலமோ? பிடித்திருக்கும் கணேசன் உடைமாற்றி அலங்காரம் செய்வதற்கு! இன்றோ, ஜீப் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததால் அலங்காரத்துக்குரிய நேரத்தில் கணிசமான ஒருபகுதி மீதப்படுத்தப்பட்டது.




"பெண்கள் இல்லாத உலகில் எனக்கொரு பிறவி கிடைக்காதா?— அவர் கண்களில் நின்று பிழைத்திட இங்கொரு காவல் கிடைக்காதா?"

—காசி ஆனந்தன்

## 8. துரை கேட்ட கேள்வி

ஜீப், அந்த மலைப் பிராந்திய ரோட்டுப் புழுதியை மட்டும் வாரி இறைத்துவிட்டுச் செல்லவில்லை; கணேசன் பூசியிருந்த உயர்ந்த ரக பவுடரின் இனிய மணத்தையும் வாரி இறைத்து விட்டுச் சென்றது!

ஜீப்பின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தான் கணேசன். பருவப் பெண்ணின் மதமதப்போடு செழித்து வளர்ந்திருந்த தேயிலைப் பற்றைகளையும், அவற்றினிடையே நிறுதிட்டமாக வானோங்கி வளர்ந்திருந்த சவுக்குத் தருக்களையும், இடையிடையே குறுக்கிட்ட 'லயன்'களையும் பின்னுக்குத் தூக்கி எறிந்து கொண்டு லாவகமாக ஓடியது ஜீப்.

காலையில் பங்களாவிலிருந்து குறுக்குப் பாதையால் பாடசாலைக்கு வந்ததால் அத்தனை தூரம்போல் இருக்கவில்லை கணேசனுக்கு.

இப்பொழுதோ ஜீப் வளைந்து வளைந்து முடிவில்லாத தூரத்துக்கு ஓடிக் கொண்டிருப்பது போல் பட்டது அவனுக்கு. ஒரு சமயம் குன்றின் மேலிருக்கும் துரையின் பங்களா கண்ணுக்கு நன்கு புலப்படும். பங்களாவைக் கவிந்திருந்த பூக்காடுகளும் நன்கு தோற்றமளிக்கும். திடீரென்று ஜீப் இன்னொரு வளைவால் திரும்பி ஓடத் தொடங்கி விட்டால், பங்களாவும் மறைந்து, பூக்காடுகளும் மறைந்து புதிதான ஒரு சூழல் தென்படும். சிற் சில சமயங்களில் பின்னால் தள்ளப்பட்ட பாடசாலை கூடத் தென்படும்! இந்த விசித்திரமான காட்சி மாற்றத்தோடும், பாதை மாற்றத்தோடும் மனிதனுடைய வாழ்க்கைப்பாதையின் ஏற்ற இறக்கங்களை எண்ணிப் பார்த்தான் கணேசன். முடிவற்ற ஒரு சங்கிலித் தொடராக வாழ்க்கை அவனுக்குத் தோற்றமளித்தது கண்ணெதிரே தெரிவது திடீரென மறைவதும், கண்ணிலிருந்து மறைந்தது திடீரெனத் தோற்றமளிப்பதையும் எண்ணிய போது வாழ்க்கை ஒரு மாயம்போலவும் பட்டது அவனுக்கு. இப்படி மறைவதும், தோற்றுவதும், சங்கிலித் தொடர் போல் இணைவதும் மனிதன் செல்லும் பாதையையும், சூழலையும் பொறுத்ததேயன்றி, வாழ்க்கை என்னவோ சாஸ்வதமானது தான் என்றும் அவனுடைய இன்னொரு மனம் அடித்துச் சொன்னது. இந்த எண்ணப் பின்னல்களுக்கு மத்தியில், மலையகத்துப் பாதைப் பின்னல்களுக்கு கூடாகப் போய்க் கொண்டிருந்தான் கணேசன்.

பங்களாவின் முன்றலில் ஜீப்பைக் கொண்டுவந்து நிறுத்தினுன் சாரதி. சுங்கான் புகைக்கு மத்தியில் பங்களாவாயிலில் நின்றுகொண்டிருந்தார் துரை. முகத்தில் குதூகலம் விளையாட கணேசனை வரவேற்ருர் துரை.

'உங்களை மிகவும் அசௌகரியப்படுத்தி விட்டேனே'?

'அப்படியொன்றுமில்லை. மீண்டும் தங்களைச் சந்திப்பதில் மிகுந்த உற்சாகம் கொண்டுள்ளேன் நான்' என்று அடக்கமாகப் பதில் கூறினுன் கணேசன்.

இருவரும் உபசரிப்பு மண்டபத்துள் சென்று அமர்ந்து கொண்டனர். இந்தப் பங்களாவில் யாரையோ தான் தேடுவதாகச் சந்தேகம் கொள்ளாவண்ணம், மிக நுணுக்கமாக அக்கறை சிறிதும் இல்லாதவன்போல் தன் கண்களை பங்களா முழுவதும் ஒருமுறை சுழல விட்டான் கணேசன்.

'புதிய இடம் உங்களுக்குப் பிடித்திருக்கின்றதா?'

'நான் கொஞ்சம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அனல் தெறிக்கும் வரண்ட பகுதியில் இருந்து வந்திருக்கின்ற எனக்கு இந்த வளம் மிக்க சூழலைப் பார்க்க மிகுந்த உற்சாகம் பிறக்கின்றது.'

'அப்படியானல் வரண்ட பகுதியில் வனப்பு இல்லை என்பதா உங்கள் கருத்து?'

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இங்கு இயற்கை அன்னையின் சிங்காரிப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கின்றது. இந்த இனிய காட்சிகளால் மனதில் சற்று ஆரோக்கியமும் பிறக்கின்றது.'

'உங்களுடைய இந்தக் கருத்தைச் சற்றுத் தயக்கத்தோடுதான் என்னல் ஏற்றுக்கொள்ள முடிகின்றது.'

'இங்கு சண்டைக்கோ? பிடிவாதத்திற்கோ? இடமில்லை. தாங்கள் தாராளமாகத் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். நான் ஆசிரியத் தொழிலுக்காக இங்கு வந்திருந்தாலும் என்றும் நான் ஒரு மாணுக்கன் என்பதை மறந்து போகவில்லை!'

கணேசனுடைய இந்த இங்கிதமானபதில் துரைக்கு ஒரு குதூகலத்தைத் தந்தது.

'இந்த உலகின் இயற்கை அமைப்பு இருக்கின்றதே. அதில் ஒன்றுமே இல்லை! இங்கு வாழுகின்ற மனிதர்களைப் பொறுத்தே உலகம் தோற்றமளிக்கின்றது.'

துரையின் பிடிகை, தான் கற்று வைத்திருந்த ஒரு பழமொழியைக் கணேசனுக்கு ஞாபகமூட்டியது 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு!' என்று அந்தப் பழமொழியை மனத்துள் மீட்டிக் கொண்டான் அவன்.

'இந்த மலைப் பிரதேசம் பார்ப்பதற்குப் பசுமையாகத்தான் இருக்கின்றது. இந்த மலைகளின் இடுக்கில் பாய்கின்ற நீர்வீழ்ச்சியும், அது இசைக்கும் 'சலசல' ஒலியும் அற்புதமாகத்தான் இருக்கின்றன. அதற்காக நீண்ட பல நாட்களுக்கு சலிப்பின்றி இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இவற்றில் சலிப்புற்ற மனதுக்குப் புதிய காட்சியும், புதிய சூழலும் தேவைப்படுகின்றது. பிறந்த காலம் தொட்டு இற்றைவரைக்கும் நீங்கள் உங்கள் வரண்ட பகுதியிலேயே தங்கிவிட்டதால், அந்த வரண்ட பூமி உங்களுக்குச் 'சப்'பென்று தோற்றமளிக்கின்றது இங்கு வசிக்கின்ற ஒருவர் உங்கள் பகுதிக்கு எதிர்பாராத விதமாக வர நேர்ந்தால், 'சுள்' ளென்று அங்கு எறிக்கும் வெயிலையும், நுரை தள்ளிச் சிறியடிக்கும் கடலின் அலையையும் மிகுந்த ஆர்வத்தோடு இரசிப்பான். அது கூடச் சிறிது காலத்துக்குத்தான்! அப்புறம் அங்கும்கூட ஒன்றும் காண முடியாது போய்விடும். ஆனல், இதற்கெல்லாம் அப்பால், ஓரிடத்தைச் சாகாத பசுமையோடும், அற்புதமான இனிய காட்சிகளோடும் வைத்திருக்கின்ற சக்தி உலகில் ஒன்றே ஒன்றுக்குத்தான் இருக்கின்றது. அந்த ஒன்றுதான் பெண்!'

துரையினுடைய இந்த நீண்ட பிரசங்கம் கணேசனை மிகுந்த உற்சாகம் கொள்ள வைத்தது. தன் கட்சியிலும் ஆள் இருக்கிறதென்பதை எண்ண, வாழ்க்கையில் நல்ல பிடிப்பும், நல்ல அணையும் ஏற்படுவதாகப்பட்டது அவனுக்கு!

மனம் செறிந்த குதூகலத்தோடு தன் எதிரே இருந்த துரையை நோக்கினுன் கணேசன். தலைமையாசிரியரின் எச்சரிப்பும், கிருஷ்ணவின் பங்களா பற்றிய அச்சமும் 'எதனல் ஏற்பட்டன?' என்பதன் பொருள் கணேசனுக்கு இப்பொழுது நன்கு புலப்பட்டது!

'இத்தகைய நமக்கு வேண்டிய ஒரு பாத்திரத்தைக் குமாருக்கு அறிமுகம் செய்தால் அவன் எத்தனை மகிழ்ச்சியடைவான்? அவன் கவிதையுள்ளம் துள்ளி எத்தனை இனிய கவிதைகளைப் பொழியத் துடிக்கும்'? என்று எண்ணிவிட்டான் கணேசன்.

(11-ம் பக்கம் பார்க்க)

## மானமதுவே பெரிது

—நாதன்—

கல்முனைத் தொகுதியிலே
காடைத்தனம் மலிந்து
பல்லாயிரவர் பயந்து
பாதுகாப்புத் தேடுகின்ருர்
சொல்லப் பெரும் வெட்கம்!
சுயஇச்சைப் போரிதுவா?
அல்லல்படுவோர் யார்?
ஆய்ந்தோய்ந்து பாருங்கள்.

ஒரு குடும்பத்தாராய்
ஒற்றுமையின் அணிகலனய்
பெருமதிப் போடிருந்த
பேராற்றல் மிக்கோர்கள்
சிறுமயோர் தாம் செய்த
செயல்வெறிக் கூத்ததனல்
பெறுமதியே குறைந்ததுவே
பேசவாய் நமக்குண்டா?

பத்திரிகையில் பார்த்தோர்
படிக்க அதைக் கேட்டோர்
'எத்தகையோர் வாழ் நாடு'
என்று இயம்பாரோ?
சித்தம் தனைக் கொஞ்சம்
செயல் படவிட்டு விட்டால்
பித்தம் தெளியுமினைப்
பேதமும் அழிந்தொழியும்.

போன உயிர் வாராது
பொழுது பழுல் நங்காது
ஆனது ஆனது தான்—இது
அமுதத் தமிழ் வாக்கு
மீனவர் தன் பணமா?
மேழிச் செல்வத் தனமா?
மானமதுவே பெரிதாம்!
மாநுடராம் கல்முனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். ஆர். பொன்முடியன், திருமலை

கே: திருமலை யூ. என். பி. வேட்பாளர் தன்னை அனுப்பி வைத்தால் துணிமணிக்கு விலை குறையும் என்று பிரசாரம் செய்கின்ருரே!

ப: அவரை அனுப்பா விட்டால் துணிமணி விலை குறையாது என்பது இதன் அர்த்தம். துணி விலையைக் கூட்டுவதும் குறைப்பதும் அவர் கையில் இருப்பது உண்மையானுல், தேர்தலை எதிர்பார்க்காமல் இப்பொழுதே அவர் விலைகளைக் குறைத்து விடலாமே!

ஃ

கே. எஸ். சிவநடராசா, அச்சுவேலி

கே: கொழும்பில் உள்ள சிங்கள மக்கள் திரு பொன்னம்பலத்தை கொழும்பில் போட்டியிடும்படி கேட்டது ஏன்?

ப: அவர் கொழும்பிலேயே வசித்து வருவதால் கட்டுப்பணத்தை இழக்க 270 மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பாணம் வரை யா போக வேண்டும் என்று கருதி அவர்கள் அப்படிக் கேட்டிருக்கலாம். கொழும்பில் எந்தச் சிங்களவர்கள் எங்கே, எப்பொழுது அப்படிக் கேட்டுக்கொண்டார்கள் என்பதை அவரிடம் கேட்டுத் தெரிந்து எழுதுவீர்களா? நல்ல வேளையாக அதனை அவர் யாழ்ப்பாணத்தில் கூறினுரே? கொழும்பில் சிங்கள மக்களிடம் இதனைக் கூறியிருந்தால் அவர்களிடமே நன்ருக வாங்கிக் கட்டியிருப்பார்.

ஃ

க. சூடாமணி, தையிட்டி

கே: மூன்று வருடங்களில் ஓரளவு உரிமை பெற்றுத் தருவேன் என்று சொல்லும் பொன்னம்பலம், அந்த உரிமையைத் தமிழ் பேசுவோருக்கு வழங்கிய ப-செ ஒப்பந்தத்தை எதிர்த்தார். இன்று அவர் பேசும் பேச்சு விளங்க வில்லையே. இதை விளக்குவீரா குயுக்தியாரே?

ப: விளங்காமலிருந்தாற்தான் அது திரு. பொன்னம்பலத்தின் பேச்சாக இருக்க முடியும். அவர் பேசுவது முதலில் அவருக்காவது விளங்க வேண்டுமே!

கே: காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தையை எதிர்த்துப் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஆறுமிரத்துக்கு கூடுதலான மேலதிக வாக்குகளால் வெற்றி பெருவிட்டால் தலையை மொட்டை அடித்துவிட்டுத்தான் பாராளுமன்றம் செல்வதாக உறுதி கூறுகிருராமே!

ப: வெற்றி பெருவிட்டால், தலையை மொட்டையடித்தாலும் பாராளுமன்றத்துக்குச் செல்ல முடியாதென்பதை அவரிடம் கூறி வையுங்கள்.

ஆர். கே. திருகோணசுந்தரம், புதுவட்டக்கொடை

கே: பிரசாவுரிமைப் பிரச்சினையில் தன்னை வீணில் திட்டுவது தப்பான காரியமாகுமென திரு. பொன்னம்பலம் கூறுகிருரே ஏன்?

ப: தான் செய்த துரோகத்தை துரோகமென ஒப்புக்கொள்ள துணிவு இல்லாததால்.

ஃ

கே. கே. வி. ஆனந்தசர்மா, வறக்காப்பொலை

கே: இன்றைய நிலையில் தமிழ் சாதிக்கு ஏற்பட்டு இருக்கும் இன்னலைப் போக்கத் தன்னுடன் பத்து வாலிபர்களை அனுப்பும்படி கேட்கிருரே தளிப் பெருந்தலைவர்?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: இதிலிருந்து 10 பேர் கூட அவரைப் பின்பற்றத் தயாரில்லை என்பதை அவரே உணர்ந்திருக்கிருர் என்பது அம்பலமாகிறது.

ஃ

ரா. மூ ராமசாமி, பபுலானை பஜார்

கே: யூ. என். பி. தனது தேர்தல் அறிக்கையில் இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றி ஏன் வாயைமூடிக்கொண்டிருக்கிறது?

ப: தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுவதற்காக.


# வட மாகாணத்தில் நல்ல வரவேற்பு!

ஆமாம்!

# அருத எண்ணெய்

பாவிப்போரின் தொகை நாளுக்கு நாள் பல்லாயிரக் கணக்கில் பெருகிக் கொண்டே வருகின்றது! இன்றே நீங்களும் அருத எண்ணெய் பாவித்துப் பலனடையுங்கள்! அருத எண்ணெய் கேச வளர்ச்சிக்கும், மூளைக் குளிர்ச்சிக்கும் சிறந்தது. நீங்காத ஜலதோஷத்தையும், நீண்ட நாள் பீனிசத்தையும் குணப்படுத்தவல்லது. கண், தலை, காது, மூக்கு சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் சொஸ்தப்படுத்தவல்லது.

—சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்—

## பி. எம். திசாநாயக்க,

நான்கு கோவில்களின் தர்மகர்த்தா

அருத எண்ணெய் அலுவலகம், கண்டி ரோட், கம்பளை.

## யாழ்ப்பாணத்தில் அருத எண்ணெய் விற்பனையாளர்கள்:

யாழ்ப்பாணம்
வி. எஸ். கைலாசம்பிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை.
ஏ. இராசையா அன் சன்ஸ், 69, கே. கே. எஸ். ரோட்.
ஸ்ரீ ஆனந்த பவான், ஸ்டேசன் ரோட்.
எஸ் வி. பி. கார்த்திகேய பிள்ளை, பெரியகடை.

நல்லூர்
பி. இராசரத்தினம், குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நடன முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்,

திருநெல்வேலி
சிவன் ஸ்டோர்ஸ்,
பரமேஸ்வரா ஜங்சன்,
எம். நடராசா & பிரதர்ஸ், திருநெல்வேலி வடக்கு

கோப்பாய்
ஈ. கதிரேசு, கோப்பாய் சந்தி,
சிவபாதம் ஸ்டோர்ஸ், இருபாலை சந்தி.

சாவகச்சேரி
லிங்கம் ஸ்டோர்,
அம்பிகா டிஸ்பேன்சரி,
ஏ. எம். அபூபக்கர்,
எம். எம். சுல்தான் அப்துல் காதர் அன் பிரதர்,
விநாயகர் ஸ்டோர்ஸ்,

இணுவில்
குமரகுருபர ஸ்டோர்ஸ், எஸ். பரமலிங்கம்.

சுன்னுகம்
யாழ்ட்டன் ஸ்டோர்ஸ்,
ராஜா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
பிருந்தா மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
ஆர். எம். கான்பாய்,
எஸ். வைத்திலிங்கம், சுன்னுகம் தெற்கு,
எம். கே. செல்லையா, 71, மார்க்கெட்.
ஏ. கே. சாந்தலிங்கம், 70, மார்க்கெட்.
எம். தம்பித்துரை, கந்தரோடை ரோட்.

கலட்டி
கே. டி. சிவகுரு, 17, நாச்சிமார் கோவிலடி.

கோண்டாவில்
கே. கோபாலபிள்ளை, கோண்டாவில் மேற்கு.

சுழிபுரம்
என். முருகேசு, மூளாய் ஆஸ்பத்திரி முன்னுல் மூளாய்.
கே. தம்பு.

சண்டிலிப்பாய்
கே. டி. நடராஜா, மாசியப்பிட்டி.

காங்கேசன்துறை
கே. செல்லையா அன் பிரதர்
சாந்தினி ஸ்டோர்ஸ்,

எஸ். இளையதம்பி, பருத்தித்துறை ரோட்.
டி. கனகசபை, மெயின் வீதி,
சிங்கப்பீடா ஸ்டோர்ஸ்.
விநாயகர் ஸ்டோர்ஸ்.
பிள்ளையார் ஸ்டோர்.
ஆசை ஸ்டோர்ஸ். தையிட்டி.
வி. ஐயாத்துரை.
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்.

பண்டத்தரிப்பு
ப. நோ. கூ. ச. சமாச புடவை, சில்லறை விற்பனவு நிலையம், பிரதான வீதி.
ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்.
என். நல்லசேகரம் ஸ்டோர்ஸ்,
கே. எல். அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்.

ஊர்காவற்றுறை
வசந்தா ஸ்டோர்ஸ் அன் பேக்கரி.
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்.
வி. எஸ் விநாசித்தம்பி அன் சன்ஸ்.
முருகன் ஸ்டோர்ஸ்.
வி. திருநாவுக்கரசு,
ப. நோ. கூ. ச. பருத்தியடைப்பு.
பாலா பிரதர்ஸ்.

மானிப்பாய்
எம். சின்னத்துரை.
வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் பிரதர்.

ஆனைக்கோட்டை
ஆர். அருணுசலம், வண்ணுர்பண்ணை வ. மே.

ஆவரங்கால்
மல்லிகா ஸ்டோர்ஸ்.
எம். சிவரத்தினம்.

புத்தூர்
செல்லத்துரை ஸ்டோர்ஸ்.

துன்னலை தெற்கு
ஐ. பொன்னம்பலம்.

மாவிட்டபுரம்
ராஜா ஸ்டோஸ்ர்.
முருகன் ஸ்டோர்ஸ்.

மயிலிட்டி
எஸ் நடராசா, மயிலிட்டி கரை.
கே. சிதம்பரபிள்ளை,
அ. மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ்
ஜி. சிமியோன்பிள்ளை,
எஸ். கனகசபை, பலாலி சந்தி.

கரவெட்டி
நடன முருகன், மெடிக்கல் ஸ்டோர்ஸ், நெல்லியடி
வி. சுப்பிரமணியம், நவிண்டில்.
லக்ஷ்மி ஸ்டோர்ஸ், நெல்லியடி.
ஈஸ்வரி மெடிக்கல் ஸ்டோர்ஸ் நெல்லியடி.
எஸ் வி. முருகேசு, நெல்லியடி.
கே. எஸ். வீரசுத்தி, மாணிக்கபதி,
கரவெட்டி மேற்கு.
கிருஷ்ணு ஸ்டோர்ஸ்,
முருகன் ஸ்டோர்ஸ்,
கணேஷ் மெடிக்கல் ஸ்டோர்ஸ், நெல்லியடி.

பருத்தித்துறை
கே. எஸ். மார்க்கண்டு, குமாரவேல் மருந்துச்சாலை.

வல்வெட்டித்துறை
கலாநிதி ஸ்டோர்ஸ்,
எஸ். கே. சின்னத்துரை.
ச. எம். விஸ்வலிங்கம்.

மில்லடி
கே. சுப்பிரமணியம், கல்வத்தை.

உடுப்பிட்டி
வி. சிவரத்தினம், வைரவர் கோயிலடி.

அச்சுவேலி
டி. இராமலிங்கம் அன் சன்ஸ்,
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்,
எம். இராசையா,
எஸ். கந்தசாமி, சன்னதி ரோட்,
கணேசன் ஸ்டோர்,
சுகன்யா ஸ்டோர்.

தெல்லிப்பளை
எஸ். ரங்கநாதன் அன் கம்பெனி,

சங்கானை
கதிர்வேல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்.
என். டி. இராசரத்தினம், மார்க்கெட் பிரைட்ஸ்
ஏ. டி. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
என். காசிப்பிள்ளை,

உரும்பராய்
விக்னேஸ்வரன் ஸ்டோர்ஸ்,
எஸ். தனபாலசிங்கம்,

உடுவில்
எஸ். மயில்வாகனம்.

யாழ்ப்பாணத்திற்கு ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி,

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Sivam/Sun 1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நான்கு முறை வாக்குறுதிகளை மீறினவரின் "ஈராண்டு" வாக்குறுதியை எப்படி நம்புவது?

## தமிழ் பேசும் மக்களை ஏமாற்ற மற்ருெரு முயற்சி

தேர்தற் பிரசார மேடையில் ஏறி நின்று பேசுபவர்களிற் சிலர் கடந்த காலத்தை மறந்து பேசுகிருர்கள் கண்ணை மூடி விட்டால் உலகம் இருண்டு விட்டது என்று பூனை எண்ணுவது போல் இவர்கள் கற்பனை செய்து கொண்டு மேடையிற் பேசி வருகிருர்கள். கடந்த காலங்களில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சிகளைத் தமிழ் பேசும் மக்கள் மறந்து விட்டார்கள் என்று தமிழ்க் காங்கிரசார் எண்ணுகிருர்கள். அந்த நம்பிக்கையில் பல வாக்குறுதிகளை எத்தகைய தடையுமின்றி அவிழ்த்து விடுகிருர்கள் தேர்தற் பிரசார மேடைகளில்.

### புதிய தந்திரம்

கடந்த வாரங்களில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆயுட்காலத் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் இரண்டு வருட அவகாசம் கேட்டிருக்கிருர். 'தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றி பெறச் செய்தால் இரண்டு வருட காலத்தில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதாகவும் தவறினுல், தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை உதறித் தள்ளி விட்டு வெளியேறத் தயார், என்றும் திரு பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

### டொனமூர்த் திட்டம்

இருபதாண்டுகளுக்கு மேலாகப் பாராளுமன்றத்தில் இருந்து சாதிக்க முடியாதவற்றையா இரண்டு ஆண்டுகளிற் சாதிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியை திரு. பொன்னம்பலம் அவர்களிடம் கேட்பதற்கு முன்னுல், இற்றைவரை அவர் கொடுத்த வாக்குறுதிகளில் எவற்றையாவது நிறைவேற்றியிருக்கிருரா என்று ஆராய்வது சால்புடைத்தாகும்.

டொனமூர்த் திட்டம் இலங்கைக்கு வந்தபொழுது அத் திட்டத்தைப் பலரும் புறக்கணித்தார்கள். 1931ம் ஆண்டு இலங்கை அரசாங்க சபைக்கு நடைபெற்ற தேர்தலை வடமாகாணத்திலுள்ளவர்கள் அனைவரும் புறக்கணித்தார்கள். வட மாகாணத்திலுள்ள சகல தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறவில்லை. இப்புறக்கணிப்புப் போராட்டத்தை சுதந்திரத்திற்காகப் போராடிய வாலிபமாநாட்டார் வெற்றிகரமாக நடாத்தி வந்தார்கள். ஆனுல் ஜீ. ஜீ. பொன்னம்பலமும், அவருக்கெதிராக ஆனந்தரும் மன்னுரில் போட்டியிட்டார்கள். அன்றைய தமிழ் தலைவர்கள் புறக்கணிக்க,வாலிபமாநாட்டார் புறக்கணிக்க திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேர்தலிற் குதித்தார்.

பொன்னம்பலமும், ஆனந்தரும் தேர்தலிற் குதிக்கிருர்கள் என்பதை அறிந்தவாலிப மாநாட்டார் திரு பொன்னம்பலத்திடம் தூது சென்ருர்கள். சகலரும் எமது கொள்கையை ஏற்றுத் தேர்தலைப் புறக்கணிக்கின்ற காரணத்தினுல் நீங்களும் (திரு பொன்னம்பலமும்) புறக்கணிக்க வேண்டுமென்று வேண்டினுர்கள்.

### முதல் வாக்குறுதி

வாலிப மாநாட்டாரின் கொள்கையை ஏற்பதாகக் கூறிய பொன்னம்பலம் அவர்களின் கொள்கையைத் தன்னுடன்போட்டியிடும் ஆனந்தார் ஏற்கமாட்டார் என்றும், எனவே தனது வெற்றிக்காக வாலிப மாநாட்டார் உழைத்தால், தேர்தலில் வெற்றிபெற்றவுடன் பதவியைத் துறப்பதாகக் கூறினுர். தேர்தலில் தான் வெற்றி பெற்ருல் மீண்டும் ஆனந்தர் தேர்தலுக்கு நிற்க மாட்டார் என்றும், எனவே வாலிப மாநாட்டாரின் புறக்கணிப்பு பூரணமாக வெற்றியைக் கொடுக்கும் என்றும் வாதிட்டார் பொன்னம்பலம்.

திரு. பொன்னம்பலத்தின் வாக்குறுதியை வாலிப மாநாட்டார் நம்பி அவரின் வெற்றிக்காக உழைத்தார்கள். ஆனுல் தேர்தல் முடிவு ஆனந்தருக்கே வெற்றியைக் கொடுத்தது.

### வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டார்

தேர்தல் முடிவு பொன்னம்பலத்தின் அந்தரங்கத் திட்டத்திற்கு மாருக அமைந்ததும், வாலிப மாநாட்டாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டார். அரசாங்க

**பூங்குன்றன்**

சபையில் எப்படியும் இடம் பிடிக்க வேண்டுமென்ற ஆசை பிடரியிற் பிடித்துத் தள்ள, வாலிப மாநாட்டாரின் முடிவுக்கு மாருகப் பிரச்சாரம் செய்வதென்று முடிவு செய்தார் திரு. பொன்னம்பலம். வாலிப மாநாட்டாருக்குக் கொடுத்த வாக்குறுதிக்குப் புறம்பாக தேர்தல் நடக்க வேண்டுமென்றும், வெள்ளையர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பிரசாரக் கூட்டங்களை நடாத்தினுர்.

வெள்ளையனின் கொள்கைக்குக் கட்டுப்பட்டு நடந்தாற்தான் உத்தியோக உயர்வு, வியாபார வளர்ச்சி முதலியவற்றில் நாம் முன்னேற்றமடைய முடியுமென்று பொன்னம்பலம் மக்களிடையே பிரச்சாரம் செய்தார்.

### தேசாதிபதிக்கு விண்ணப்பம்

வாலிப மாநாட்டரினது நோக்கத்தைப் புறக்கணித்து, தமிழர் மானத்தைச் சற்றேனும் கவனியாது பதவியானது பிடரியிற் பிடித்துத் தள்ள வகுப்புவாத சிங்களத் தலைவர்களிடம் சென்ருர். அவர்களின் உதவியுடன் அன்றைய தேசாதிபதி திரு. ஸ்ரபஸ் அவர்களிடம் வட மாகாணத்தில் இடைத்தேர்தல் நடாத்த வேண்டுமென்று விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார். வட மாகாணத்திற்குச் செல்வதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த தேசாதிபதி, 1934ம் ஆண்டு பொன்னம்பலத்தின் விண்ணப்பத்துடன் வடமாகாணம் வந்து தேர்தல் நடாத்துவதற்குச் சம்மதம் கொடுத்தார்.

மூன்று வருடங்களாக அரசாங்க சபையைப் புறக்கணித்து வந்த இயக்கம் 1934-ம் ஆண்டுடன் முடிவுற்றது. பதவியும் [illegible] புறக்கணிப்புப் போராட்டத்திற்கு வேட்டு வைத்தது. ஆரம்பத்தில் வாலிப மாநாட்டாருக்குக் கொடுத்த வாக்குறுதிக்குப் புறம்பாக திரு. பொன்னம்பலம் இத்தனை நிகழ்ச்சிகளையும் நடாத்தி முடித்தார்.

### சோல்பரி ஆணைக்குழு

டொனமூர் அரசியற் திட்டத்தை மாற்றியமைப்பதற்காக பத்து ஆண்டுகளுக்குப் பின் சோல்பரி ஆணைக் குழு இலங்கைக்கு வந்தது. சோல்பரி ஆணைக் குழுவிடம் — 1945ம் ஆண்டு தோன்றிய — தமிழ் காங்கிரஸ் கட்சி அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை ஆதரித்து திரு. பொன்னம்பலம் சோல்பரி ஆணைக்குழு முன் மூன்று தினங்களாகச் சாட்சியமளித்தார். முடிவில் தமிழ் காங்கிரஸ் அறிக்கையை சோல்பரி ஆணைக்குழு ஏற்க மறுத்தது. சோல்பரி ஆணைக் குழுவின் முடிவு பாதகமானது என்று பிரச்சாரம் மேற்கொண்டார் திரு. பொன்னம்பலம்.

சோல்பரித் திட்டப்படி நடைபெற்ற தேர்தலில் அத்திட்டத்தை ஆதரித்தவர்களை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் போட்டியிட்டது. அப்பொழுது இலங்கை இந்திய காங்கிரசிற்கும்—தமிழ் காங்கிரசிற்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்று ஒரு ஒப்பந்தமும் உருவாகியது அவ்வொப்பந்தத்தில் மலையக மக்களின் பிரசா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றிற்காக வாதாடுவோம் போராடுவோம் என்று எழுதி இலங்கை இந்திய காங்கிரசாரிடம் ஒப்படைத்தார்கள் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும். இலங்கை இந்திய காங்கிரசாரும் தமிழ் காங்கிரசாரின் வாக்குறுதியை நம்பி அவர்களின் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்தார்கள்.

### அமைச்சரானுர் பொன்னம்பலம்

ஒரு புறத்தில் சோல்பரித் திட்டத்தை எதிர்த்தும், மறுபுறத்தில் மலையக மக்களின் உரிமையைக் காப்பதாகவும் கூறிக் கொண்டு வெற்றி பெற்ருர்கள் தமிழ் காங்கிரசார். எந்த சோல்பரித் திட்டத்தை இறுதி வரை எதிர்ப்பேன் என்று யாழ்ப்பாணம் முற்றவெளிமைதானத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தின் போது கோட்டை முனியப்பர் மீது ஆணையிட்டுக் கூறினுரோ பொன்னம்பலம், அதே சோல்பரித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஐ. தே. கட்சியின் அமைச்சரவையில் சிறிது காலத்தில் இடம் பிடித்ததன் மூலம் வடமாகாணத்திலுள்ள தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறினுர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையிற் சேருவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டினுர் திரு. பொன்னம்பலம் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. பொன்னம்பலமும், திரு. குமாரசாமியும் (இன்றைய கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர்) 'தமிழ் இனத்திற்குப் பாதகமான முறையில் ஏதாவது சட்டங்கள் வந்தால் உடனே விலகற் கடிதங்களைச் சமர்ப்பித்து விட்டு அரசாங்கத்தைவிட்டு விலகி விடுவோமென்றும், எதற்கும் விலகற் கடிதம் நமது சட்டைப்பைக்குள் இருக்கும்' என்றும் பொது மக்களுக்கு வாக்குக் கொடுத்தார்கள்.

### நான்காவது வாக்குறுதி

ஐ. தே. கட்சி அமைச்சரவையைத் திரு. பொன்னம்பலம்அலங்கரிக்கும்பொழுது இலங்கை இந்தியர் வாக்குரிமை மசோத கொண்டு வரபட்டது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினருக்காக வாதாடுவேன், போராடுவேன் என்று எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தை புறக்கணித்து, இந்தியத் தமிழினதும் வாக்குரிமையைப் பெற்று பாராளுமன்றம் வந்தேன் என்பதை மறந்து ஒரு இந்தியத் தமிழனின் தலைமயிர் கூட இந்தியாவுக்கு அனுப்பப்பட்டால் நானும் இந்தியா போய் விடுவேன் என்றும், இந்தியத் தமிழரின் உரிமை பெறும் வரை அமைச்சர் பதவியில் சேர மாட்டேன் என்றும், யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் கோட்டை முனியப்பர் மீது சத்தியம் செய்து கூறிய வார்த்தைகளை அலட்சியம் செய்து விட்டும், தமிழினத்திற்குப் பாதகமான முறையில் அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தால் விலகற் கடிதத்தை சமர்ப்பித்து விட்டு வெளியேறுவேன் எனப் பொது மக்களுக்குக் கூறிய வாக்குறுதிகளை மறந்து—இரண்டு நாட்களாக நடந்த விவாதத்தில் பெட்டிப்பாம்பாக அடங்கி இருந்து விட்டு—தமிழினத்தை ஆழக் குழிவெட்டி நீளப் புதைக்கும் இலங்கை இந்திய வாக்குரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார் திரு. பொன்னம்பலம்.

இச்சட்டத்தை ஆதரித்ததுடன் திரு. பொன்னம்பலம் நான்காவது முறையாகதனது வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டார்.

### குமாரசாமியும் சிவசிதம்பரமும்

'விலகற் கடிதங்கள் சட்டைப்பைக்குள் இருக்கின்றன தமிழினத்திற்கு பாதகமான சட்டம் வந்தால் அவற்றில் ஒப்பமிட்டுக் கொடுத்து விட்டு ஐ. தே. கட்சியை விட்டு வெளியேறுவோம்' என்று கூறிய திரு குமாரசாமியும் தனது வாக்குறுதியைக் காற்றிற் பறக்க விட்டார். தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வாக்குறுதிகளைக் காற்றிற் பறக்க விட்ட சம்பவங்கள் பல.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் கடைசிப் பிரதிநிதியாக கடந்த பாராளுமன்றத்தில் வீற்றிருந்த திரு. சிவசிதம்பரமும் சில வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டார். 'தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவர் பதவியிருந்து வெளியேற்றப்பட்டால் எனது பாராளுமன்றப் பதவியைத் துறப்பேன்' என்று கூறினுர் திரு சிவசிதம்பரம். ஆனுல் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட பொழுதும் திரு சிவசிதம்பரம் பாராளுமன்றத்திற்குச் செல்வதை மறக்கவில்லை.

என்றுமே வாக்குறுதிகளைக் காப்பாற்றிப் பழக்

(5-ம் பக்கம் பார்க்க)


## வர்த்தகக் கல்லூரி

பருத்தித்துறை.

(ஸ்தாபிதம் : 1924)

கல்லூரி பின்வரும் பாடங்களில் (தமிழ்/ஆங்கிலம்) பயிற்சி அளிக்கின்றது.

| | |
|---|---|
| 1. பிட்மன் சுருக்கெழுத்து | 11. தமிழ்ப் பாஷை |
| 2. வணிகமும் நிதியியலும் | 12. தமிழ் இலக்கியம் |
| 3. வர்த்தக எண்கணிதம் | 13. இந்து சமயம் |
| 4. தட்டச்சு | 14. இரசாயனம் |
| 5. பொருளாதாரம் | 15. பௌதிகவியல் |
| 6. எண்கணிதம் | 16. தூயகணிதம் |
| 7. கணக்குப் பதிவியல் | 17. சரித்திரம் |
| 8. உயிரியல் | 18. பூமிசாஸ்திரம் |
| 9. சுகாதாரமும் சரீரசாஸ்திரமும் | 19. தையல் வேலை |
| 10. குடியியல் | 20. ஆங்கிலம் |

1. பட்டதாரிகளுக்கு சுருக்கெழுத்து, தட்டச்சு முதலிய பாடங்களில் 6 மாத விசேட பயிற்சி.
2. க. பொ. த. ப. (G. C. E. Ord. Level) மாணவர்களுக்கு 6 மாதத்தில் சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ்/ஆங்கிலம்) முதலியவற்றில் ஒரு வருடத்திற்குரிய பகுதியைப் பூரணமாக முடிக்கக்கூடிய முறையில் வகுப்புகள்.
3. வர்த்தக ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு வர்த்தகம், கணக்குப்பதிவியல் முதலியவற்றில் பயிற்சி.
4. உயர் பொ. த. ப. (G. C. E. Advanced Level) பரீட்சைக்கு அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், கணக்கியல் ஆகியவற்றில் பயிற்சி.
5. எழுதுவினைஞர் பரீட்சைக்கும் (Clerical Class 11) தரணிப் பரீட்சைக்கும் (Proctors Exam) கணக்குப் பதிவியலில் விசேட பயிற்சி.
6. கடித மூலம் பயிற்சி:- பிட்மன் சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தகம். (தமிழ்)
7. பிட்மன் சுருக்கெழுத்து (தமிழ்) புத்தகங்கள் இங்கே விலைக்குக் கிடைக்கும்.

வேறு விபரங்களுக்கு மனேஜருடன் தொடர்பு கொள்[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிநாட்டைக் காக்க தமிழரசே வழிவகுக்கும்

## வேடதாரிகளிடம் எச்சரிக்கை வேண்டும்

திங்கள மக்களின் திட்டமிட்ட குடியேற்றத்தினுல் சிர்குலேந்து, பண்டையத் தமிழின் பெருமை இழந்து வருகிறது வன்னிநாடு. வேற்றினத்தாரின் குடியேற்றப் பேரபாயத்திலிருந்து விடுதலே பெற வசதிகளே அளிக்க தமிழரசுக் கட்சி ஒன்றினுல் மட்டுமே முடியும். ஆகவே தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சிக்குப் பேராதரவு காட்ட வேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வாறு வவுனியாத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. வின்சன்ட் அவர்களே ஆதரித்து பாவற்குளத்



க. வின்சன்ட்

தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய திரு வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துகையில, தமிழ் பேசும் இனத்தைக் காட்டிக் கொடுத்து அதனுல் கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக அரசியல் வேடம் புனேந்து மக்களே ஏமாற்றுபவர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்ருர்.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பேசுகையில், தமிழ் பேசும் மக்கள் இதுவரை காலமும் இழந்து போன உரிமைகளே மீண்டும் பெற வாய்ப்பினே நல்கக் கூடிய காலம் அண்மிவிட்டது. தமிழரசுக் கட்சியிடமுள்ள கட்டுக்கோப்புப் போன்ற இணைப்பு இல்லாத சிலர் பாராளுமன்றம் செல்வார்களாஞல், நமக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளும் பறிபோய் விடும், என்று கூறினுர்.

திரு. க. வின்சன்ட் திரு. வி. நவரத்தினம், ஜனுப் கே. எஸ். ஏ. கபூர், திரு. த. சுப்பிரமணியம் முதலாஞேரும் உரை நிகழ்த்தினர்.

சாளம்பைக் குளத்திலும் அடுத்த நாள் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த 13ம் திகதி வவுனியாத் தொகுதியைச் சேர்ந்த பெரியதம்பனையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. செல்வநாயகம், திரு. வி. என். நவரத்தினம், திரு. க. வின்சன்ட் முன்ஞள் வவுனியா பட்டினசபைத் தலைவர் திரு. ரி. சுப்பிரமணியம், தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. திருஞவுக்கரசு ஜனுப் கபூர் ஆகியோர் பங்குபற்றினர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்படாத தமிழ் காங்கிரசார் இன்று தேர்தல் மேடைகளில் நின்று இரண்டு வருட அவகாசம் கேட்பதற்காக வாக்குறுதி கொடுப்பதும் வேடிக்கையாக இருக்கிறது.

தமிழ் காங்கிரசாரினதும் திரு. பொன்னம்பலத்தினதும் கடந்த கால அரசியல் வரலாறு வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடும் வரலாருகவே இருக்கிறது. அன்று, தமிழ் பேசும் மக்கள் திரு. பொன்னம்பலத்திடமும் அவரது கட்சியினரிடமும் இருந்து வாக்குறுதிகளைப் பெற்ருர்கள்

### நான்கு முறை..

அவற்றை நயபினர்கள் முடிவில வாக்குறுதியைக் கொடுத்தவர்கள் பொறுப்பற்ற முறையில் வாக்குறுதிகளைக் காற்றிற்றுது தமிழ் பேசும் மக்களே ஏமாற்றினுர்கள். இன்று, திரு. பொன்னம்பலம் வலிந்து சென்று வாக்குறுதிகளைக் கொடுக்கிருர். அவற்றை நம்புமாறு தமிழ் பேசும் பொது மக்களே மன்ருடுகிருர். ஆனல், பொது மக்கள் திரு. பொன்னம்பலத்தினதும், அவரது கட்சியினரதும் வாக்குறுதிகளே நம்பமறுக்கிருர்கள். பொன்னம்பலம் கொடுக்கும் வாக்குறுதிகளும், கூறும் உறுதி மொழிகளும் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையைப் பெறவில்லை. அவ்வாக்குறுதிகள் அனைத்தும் காற்றுடன் கலக்கின்றன.

தமிழ் பேசும் பொது மக்கள் மந்தைக் கூட்டங்கள் அல்ல. காலத்துக்குக் காலம் திரு. பொன்னம்பலமும் அவர் குழுவும் கூறும் உறுதி மொழிகளே நம்பி ஏமாறத் தமிழ் மக்கள் தயாராக இல்லை காலம் மாறிவிட்டது. இதை திரு பொன்னம்பலம் உணரவில்லை. காரணம், அவர் நீண்ட அரசியற் தூக்கத்திலிருந்து இப்பொழுது தான் விழித்திருக்கிருர்.

## தமிழரசு வாலிப முன்னணி பிரசாரக் குழு

தமிழரசு வாலிப முன்னணி தேர்தற் பிரசாரக் குழு இம் மாதம் 6, 7, 8-ம் திகதிகளில் வவுனியாத் தொகுதியிலும், 9, 10, 11-ம் தேதிகளில் மன்ஞர் தொகுதியிலும் பிரசாரத்துக்காகச் செல்ல விருப்பதாக வாலிப முன்னணி அறிக்கை ஒன்று கூறுகிறது.





அருந்துக
நுவரெலியா



இது சிறந்த பியர் ஏனெனில்:

100 வருட வடிமுறை அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.

இதன் தனிப் பெரும் சுவையின் ரகசியம் தெளிவான, சுத்த நுவரெலிய நீரின் தன்மையேயாகும்.

மேலும் வடிமுறையில் பழுத்த அனுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடிக்கப்படுகிறது. பில்ஸ்னர் "ஏல்" லாகர்.

சிலோன் புருவெரி லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவாழ நிலமின்றி குலம் வாழ முடியாது

## குல, நிலத்தைக் காக்க தமிழரசே துணை புரியும்

'நாம் வாழ நமக்கான நிலம் இல்லாவிட்டால் நமது குலம் வாழ முடியாது. நமது தமிழ் பேசும் குலத்தையே வேரோடு அழித்தொழிக்கவே சிங்கள ஏகாதிபத்தியம் தங்கள் இன மக்களை எமக்குச் சொந்தமான நிலத்தில் திட்டமிட்டுக் குடியேற்றி வருகிறது. இந்தப் பேரபாயத்தை முறியடித்து நமது நிலத்தையும் குலத்தையும் காக்கவல்லது தமிழரசுக் கட்சி ஒன்றே!' மட்டக்களப்பு பாட்டாளிபுர மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் திரு. வி. நவரத்தினம் இவ்வாறு கூறினார்.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் என்று கூறும் சொற்றொடர் இந்தக் கூட்டத்துக்கே பொருந்தும் என்று அவதானிகள் கூறுமளவுக்கு சன சமுத்திரம் அலை மோதி நின்றது.

ஞாயிறு பிற்பகல் 2-30 மணி தொடக்கம் பாட்டாளிபுரத்துக்குச் செல்லும் பாதைகள் வாகனங்களுக்குத் தடை செய்ய வேண்டியதாகிவிட்டது. அலை மோதிய மக்களை கட்டுப்படுத்த முடியாது பொலிசாரே தயங்கினர்.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில்; 'கிழக்கு மாகாணத்து முஸ்லிம்கள் தான் மிகவும் உன்னிப்பாக இருக்க வேண்டியிருக்கிறார்கள். அம்பாறை மாவட்டமும், மூதூர் பகுதியும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் பண்டு தொட்டு இருந்த பிரதேசங்கள். அவற்றை சிங்கள மக்கள் குடியேற்றத்தின் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டனர். அவர்களுடைய எஞ்சிய பிரதேசத்தையேனும் பாதுகாக்க வேண்டுமென்றால், தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டே யாக வேண்டும்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து திரு. பொன்னம்பலம் மந்திரியாகவிருந்த சமயத்தில்தான் எமது பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் மிக மும்முரமாக நடைபெற்றது. அன்று, குடியேற்றம் பற்றியும் அதன் அபாயங்களையும் இட்டு அணுவளவும் பேசாதவரான திரு. பொன்னம்பலம் இன்று தமிழ் பேசும் மக்களின் கண்களில் மண்ணைத் தூவ குடியேற்றம் பற்றியும் கூறத் தலைப்பட்டிருப்பது விந்தையாகவுள்ளது என்று கூறினார்.

இப்பொதுக் கூட்டத்துக்கு நியாய துரந்தரர் திரு. ஆ. தவராசா தலைமை தாங்கினார்.

தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம், திரு. சி. மூ. இராசமாணிக்கம், திரு. பொ. மாணிக்கவாசகர், ஜனாப் மசூர் மௌலானா, ஜனாப் எம். எஸ். காதர், செனட்டர் மு. மாணிக்கம், திரு. சாம் தம்பிமுத்து, திரு. வ. பாலசிங்கம், முதலியோருட்பட பலர் இக் கூட்டத்தில் பேசினார்கள்.

## பொன்னர் புராணம்!

—காசி. ஜெயம்—

ஐம்பதுக்கு ஐம்பது கேட்டமுகம் ஒன்றே
அழகு முறை சமஷ்டியென்று சொன்ன முகம் ஒன்றே!
பைந்தமிழுக்குச் சமஉரிமை கேட்டமுகம் ஒன்றே!
பாதகரின் சிங்களத்தை ஏற்றமுகம் ஒன்றே!
வந்து நின்று சமஷ்டியினை வைதமுகம் ஒன்றே!
வாட்டவந்த ஒற்றையாட்சி போற்றுமுகம் ஒன்றே!
இந்தவிதம் ஆறுமுகம் நீ புனைரவேண்டும்!
எட்டப்பர் வடிவெடுத்து எழுந்த பெரியாரே!

பொன்னர் அடிபோற்றி! பொய்அழகர் பதம் போற்றி!
அன்னைத் தமிழ்க்குலத்தை அடகுவைத்தாய் கழல் போற்றி!
என்ன நடந்தாலும் இனியதமிழ் செத்தாலும்
தன்னுயர்வு வேண்டும் தமிழ்த்தலைவா தாள் போற்றி!

நாட்டிலுள்ள தமிழர்க்கு நஞ்சுவைத்தாய் குணம்போற்றி!
காட்டிக்கொடுக்கும் கலையறிந்தாய் திறம் போற்றி!
தோட்டத் தமிழர்க்குத் துரோகமிட்டு மாற்றார்கள்
போட்ட பதவிக்குள் போய்விழுந்தாய் புகழ் போற்றி!

சிங்கக் கொடிவரவும் சிங்களத்தின் அடிவிழவும்
இங்கு தமிழர் நிலம் இழப்பதற்கும் இத்தனைக்கும்
பொங்குவெறி ஆட்சியொடு பொழுதெல்லாம் ஒத்துழைத்த
எங்கள் பழந்தலைவர் இனியதிருத் தாள் போற்றி!

ஐந்தாண்டுக் கொருமுறைதான் அரசியலில் தலைநிமிர்த்தி
பைந்தமிழர் துயர்பறறிப் பறையறைவாய் நெறிபோற்றி
அந்தரத்தில் தமிழர்துயர் அனுபவிக்கும் வேளைகளில்
மந்திரியாய் ஊர்சுற்றி மகிழ்ந்திருப்பாய் பதம் போற்றி!

ஐயாவுன் திருவருளால் அழகு தமிழ் இனத்தவர்கள்
உய்யும் நிலையிழந்தார்! உரிமைகளைப் பறிகொடுத்தார்!
ஐயமில்லை...தமிழினத்தை அழித்துவிட்டாய்...ஆனாலும்
பொய்யுரைத்து வாழப் புறப்பட்டாய் போற்றி! போற்றி!

மட்டக்களப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கவிதையை அப்படியே தந்துள்ளோம். இப்பிரசுரம் மட்டக்களப்பு அமிர்தகழியிலுள்ள காசி. ஜெயம் என்பவரால் பிரசுரிக்கப்பட்டதாகும்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுத் தலைவர்கள்

திருகோணமலைத் தொகுதியில் பிரசாரங்களை முடித்துக்கொண்டு தலைவர் திரு. செல்வநாயகம், பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம், திரு. வி. நவரத்தினம் முதலானோர் மூதூர் தொகுதியில் பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

மூதூர் தொகுதியில் கூட்டங்களில் பேசிய தலைவர் திரு. செல்வநாயகம், 'தமிழரசுக் கட்சி ஒன்றினால் மட்டும் தான் தமிழ் பேசும் இனத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க முடியும். தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவரின் சாதியையோ சமயத்தையோ பார்ப்பதை விடுத்து அவர் கொண்டுள்ள கொள்கைக்காகவே ஆதரவு நல்க வேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமை' என்று கூறினார்.

மூதூர் தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்கும் தலைவர்கள் சென்றனர். அங்காங்கே தலைவர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் திரண்டு 'உருக்கமான வரவேற்புக்களை அளித்தனர். தலைவர் செல்வநாயகத்தை மக்கள் வணங்கிய தாய்மார்களின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் சொரிந்த காட்சி கல்நெஞ்சையும் கரைத்துவிடும்.

சல்குடாத் தொகுதியினூடாக மட்டக்களப்பை அடைந்த தலைவர்களுக்கு மட்டக்களப்பு அளித்த வரவேற்பின் சிறப்பை கடந்த வாரமே கொடுத்திருந்தோம். 25-ம் திகதி வியாழக்கிழமை காலை பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த ஒந்தாச்சிமடத்தில் பிரசாரக் கூட்டத் தொடர் ஆரம்பமாகியது. களுவாஞ்சிக்குடி, கழுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, குருக்கள் மடம், செட்டிபாளையம் ஆகிய கிராமங்களில் கட்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்க

(14-ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் கூட்டத்தில் ஆனந்தன் கைதானதேன்?

கடந்த 25-2-65 ல் மட்டக்களப்பு மைதானத்தில் தமிழ்க் காங்கிரஸ் கூட்டம் நடை பெற்ற போது பார்வையாளராகவிருந்த திரு. காசி. ஆனந்தன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அரசியற் காரணங்களுக்காக இலங்கைப் பொலிசாராலும் தமிழகப் பொலிசாராலும் 8 தடவைகளுக்கு மேல் கைதானவரான திரு. ஆனந்தன் நமது நிருபரிடம் கூறிய நிகழ்ச்சிக் கோவையினை அப்படியே தருகிறோம்.

'தமிழரசுக் கட்சிக்காரர்கள் என்னத்தைச் செய்து கிழித்துவிட்கள்? அவர்களுக்கு துணிவிருந்தால் இந்த மேடையில் வந்து சொல்லட்டுமே' என்று அன்று (25-2-65) நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த பிரமுகர்கள் எல்லோரும்சவால் விட்டுக்கொண்டிருந்தார்கள். இலங்கைத் தமிழினத்தில் நல்வாழ்வுக்காக உயிர்த் தியாகம் செய்தும் அடி உதை வாங்கியும் சிறைவாசம் ஏற்றும் இன்னல் பல சுமந்து உழைத்து வரும் ஒரேயொரு கட்சியான தமிழரசுக் கட்சியை காங்கிரஸ்காரர்கள் கீழ்த்தரமாகக் கிண்டல் செய்வதைக் கேட்டு நான் மனம் நொந்தேன். உணர்ச்சி வசப்பட்டேன்.



காசி. ஆனந்தன்

'உங்கள் மேடையிலே வந்து தமிழரசுக் கட்சி சாதித்தது பற்றி விவாதம் செய்கிறேன் எனக்கொரு வாய்ப்புத் தருவீர்களா?' என்று கேள்வி எழுதி பொன்னம்பலம் அவர்களிடம் நான் [illegible] கிப் படித்த பின்பு தன்னுடைய சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு பேசாமல் உட்கார்ந்து இருந்தார்.

நீண்ட நேரம் பொறுமையோடு பதிலை நான் எதிர் பார்த்திருந்தேன். எனக்கு அழைப்பு வரவில்லை.

மேடையில் தொடர்ந்து இழிவான வார்த்தைகளை [illegible] காங்கிரஸ்காரர்கள் கொட்டிக்கொண்டிருப்பதைக் கேட்கக் கேட்க உள்ளம் கொதித்தது. என் போன்றே அங்கு குழுமியிருந்தவர்களின் நெஞ்சங்களும் பதறின.

கூட்டத்துக்கு வந்திருந்த உதவி பொலிஸ் அதிகாரி அவர்களை நெருங்கி 'ஐயா இந்தக் கூட்டத்தை குழப்புவது எனது நோக்கமல்ல. நான் கேட்ட கேள்வி ஒன்றுக்கு இன்னும் மேடையிலிருந்து பதில் கிடைக்கவில்லை. நான் மேடைக்குச் சென்று, 'ஏன் என்னோடு விவாதம் செய்ய உங்களுக்கு இயலாதா?' என்று கேட்கப் போகிறேன் அனுமதி தருவீர்களா?' என்று கேட்டேன். அவர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை, அவர்கள் அவர்களுடைய கடமையைச் செய்தார்கள் என்பதே என்னுடைய முடிவு. நான் அந்த நிமிடத்திலேயே கைதுசெய்யப்பட்டேன்.

'தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். ஐயா கூட்டம் குழப்புவது எனது குறிக்கோளல்ல. நாட்டைக் குழப்புபவர்களிடம் நாலு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்' என்று நான் கத்தினேன். அதற்குள் அங்கு நின்ற ஜீப் வண்டி என்னை ஏற்றிக்கொண்டு பொலீஸ் நிலையத்துக்குப் பறந்து போயிற்று.

'நான் கூட்டத்தில் இருக்கும் வரை கேட்—

(13-ம் பக்கம் பார்க்க)


ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நீர். 174, "ஆனந்தா வைத்தியசாலை" என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.


ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, பொருத்துகளில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நீர்: 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பரந்த தமிழ் உலகு'




**(15)**

சிங்கப்பூர்த் தமிழர்களின திருக்குறள் ஆர்வமும் போற்றத்தக்கது. துறைமுகத் தொழிலாளரின் திருக்குறள் ஈடுபாடு ஆண்டுதோறும் பெருந் திருக்குறள் மாநாடாகப் பொலிந்து காட்சியளிக்கிறது.

3-11-63 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு கணடி வீதியிலுள்ள இலங்கைத் தமிழர் சங்க மண்டபத்தில் எனது சிறப்புரை நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர் சங்க உறுப்பினரும் ஆர்வம் மிக்க ஏனைய தமிழரும் மண்டபம் நிறையக் குழுமியிருந்தனர். சிங்கப்பூர் வானொலிப்பகுதித் துணைத் தலைவர் திரு. பி. எஸ். இராமன் அவர்கள் தலைமை தாங்கினர்.

இலங்கைத் தமிழர் சங்கத் தலைவர் திரு. கிருஷ்ணர் அவர்களின் வரவேற்புரையும் தலைவரின் தலைமை உரையும் முடிந்த பின் 'பரந்த தமிழ் உலகு' எனும் பொருள் பற்றி யானுரை நிகழ்த்தினேன். என் உரையின் சில பகுதிகளை மீண்டுக் குறிப்பிடல் பொருத்தமானது.

'எனது நாடான இலங்கையிலிருந்தும் தமிழகமான தென் இந்தியாவிலிருந்தும் பல்லாயிரம் சதுர மைல் பரப்புள்ள பெருங்கடலாற் பிரிக்கப்பட்டிருப்பினும், தமிழ் மொழிக்குத் தக்க மதிப்பளித்து அதனையும் உத்தியோக மொழியாகக் கொண்டு பேணும் இந்தச் சிங்கப்பூர் நாட்டின் பெருஞ் செயலை வியந்து வியந்து போற்றும் பொழுதெல்லாம் தமிழ் உலகம் விரிந்து பரந்திருக்கும் பாங்கு என் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

### ஆட்சியாளர்க்கு நன்றி

'இந்தச் சிங்கப்பூர் நாட்டிலுள்ள மலாய், சீனம் ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளுக்கும் இந்நாடு கொடுத்துள்ள ஆட்சி உரிமையைத் தமிழுக்குங் கொடுத்து தமிழையும் ஏனைய மூன்று மொழிகளுடன் சேர்த்து நாட்டு மொழியாக ஏற்றுளது. பண்பும் விவேகமுஞ் சேர்ந்த இத்தகைய பெருஞ் செயல் அறிஞர் பெருமக்களால் வியந்து போற்றத் தக்கது. ஆசிய நாடுகள் பலவற்றுக்கு இச் செயல் ஒரு முன்னோடியாகவும் வழி காட்டியாகவும் உள்ளது. இந் நாட்டின் ஆட்சியாளர்க்கு உலக மக்கள் யாவரும் பாராட்டுக் கூறக் கடமைப்பட்டுளர்.

'இந்திய மொழிகளுள்ளே முதன் முதல் அச்சேறிய மொழி தமிழாகும். தமிழுக்கு இப்பெருமையைப் பதினாறும் நூற்றாண்டிலே நல்கியவர்கள் கத்தோலிக்க குருமாராவர். இந்திய மொழிகளுள்ளே தொலைக் காட்சியின் முதன் முதல் இடம் பெற்றுத் திகழும் மொழியாகவும் தமிழ் இப்பொழுது ஆக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பை இந்த இருபதாம் நூற்றாண்டிலே தமிழுக்கு உரித்தாக்கியவர்கள் சிங்கப்பூர் அரசினரேயாவர். இவர்களுக்கு உலகமெங்கும் வாழும் தமிழர்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுளர்.

'உலகம்' என்பதற்குப் பல பொருள் கூறலாம் எனினும் 'பரந்த தமிழ் உலகம்' என்பதற்குத் தமிழும் தமிழரும் பரவி வாழும், பரந்து விரிந்து கிடக்கும் பல நாடுகளின் சேர்க்கை என்று கொண்டு இப் பரந்த தமிழ் உலகம் அன்றும் இன்றும் உள்ள நிலையை ஆராய்வோம்.

### உலகெங்கும் தமிழோசை

'இந்த மலேசியாவிலே சிங்கப்பூரிலும் கோலாலம்பூரிலுமுள்ள வானொலி நிலையங்களிலே தமிழ் தக்க இடம் பெற்றுள்ளது. தெல்லி, திருச்சி, சென்னை, திருவனந்தபுரம், கோழிக்கோடு, போட்லூயிசு முதலிய இடங்களிலுள்ள வானொலி நிலையங்களும் தமிழோசையை உலகமெங்கும் பரப்புகின்றன. மொசுக்கோவிலும், பீக்கிங்கிலும், இலண்டனிலும் வானொலியில் தமிழோசை பரப்பப்படுகிறது. பீயூச்சியிலும், தென் ஆபிரிக்காவிலும், பர்மாவிலும் தமிழோசை வானொலியிலிருந்து பரவுங் காலம் விரைவில் வரும். எனவே இந் நிலைமையை எண்ணும் பொழுது தமிழுலகின் பரப்பு விரிவதையும் தமிழோசை உலககெலாம் பரவுவதையும் அறிகிறோம்.

'இன்று, இந்திய மொழிகளுள்ளே தமிழே மிகத் தொகையான நாடுகளிற் பேசப்படும் மொழியாகும். இந்திய நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் பர்மாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும், மொறிசியசிலும் பீச்சித் தீவிலும், பல இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவிலும் இலங்கையிலும் மலேசியாவிலும் பர்மாவிலும் தமிழ் நாளேடுகள் நடத்தப்படுகின்றன. இந்த நாளேடுகளின் தொகை இருபத்தைந்துக்கு மேலாகும். இவ்வளவு தொகையான நாளேடுகளை வேறெந்த இந்திய மொழி கொண்டுள்ளது?

### பல்கலைக் கழகங்களில் தமிழ்

'இந்தியப் பல்கலைக் கழகங்கள் எட்டிலும், இலங்கைப் பல்கலைக் கழகம், மலாயாப் பல்கலைக் கழகம் இலனின் கிறுட் பல்கலைக் கழகம் முதலியவற்றிலும் இன்னும் செக்கோசெலவாக்கியா, பிரான்சு, சேர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளின் பல்கலைக் கழகங்கள் சிலவற்றிலும் தமிழ் வளர்க்கப்படுகிறது:

'தமிழர்கள் தொகையாக வாழும் நாடுகளில் மட்டுமின்றிப் பிற நாடுகளிலும் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்று வரும் மக்கள் உளர். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், உருசியாவிலும், சோமனியிலும், பிரான்சிலும், யப்பானிலும் செக்கோசெலவாக்கியாவிலும் தமிழ் மொழியை நன்கு கற்ற பேரறிஞர்கள் உளர். தங்கள் பெயர்களைத் தனித் தமிழில், செம்பியன், ஐங்குன்றன், கண்ணன் முதலியனவாக மாற்றி வழங்கும் பிற நாட்டுத் தமிழறிஞர்களின் தமிழ்க் காதல் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

### இடைக்காலச் செல்வாக்கு

'தமிழுலகு இப்பொழுது போல முன்னரும் பல காலப் பகுதிகளிலே பரந்து விளங்கிற்று. பத்தாம் பதினொராம் நூற்றாண்டுகளிலே—சிறப்பாக இராசேந்திர சோழன் காலத்திலே—தமிழரின் செல்வாக்கு இந்தியாவையும் இலங்கையையும் கடந்து மலாயா, சாவா, சுமாத்திரா, பாலித் தீவு, சியம், கம்போடியா முதலிய தென் கிழாசிய நாடுகளிற் பரவி நிலைத்து நின்றது. இந்தச் செல்வாக்கைக் காட்டும் சான்றுகள் இன்றுங் காணப்படுகின்றன.

'கிறித்துவுக்கு முன்னும் பின்னும் சோழ நாட்டிலே காவிரிப் பூம் பட்டினமும் ஈழநாட்டிலே மாதோட்டமும் தமிழரின் கடல் வணிகத்துறைகளாக விளங்கின. இந்தக் காலம் தமிழன் கடல் வணிகப் பொற்காலமாகும். இந்தக் காலத்திலே தமிழ் வணிகர்கள் தென் கிழ் ஆசிய நாடுகள் யாவற்றிலும் வணிகஞ் செய்தனர்; இந்நாடுகள் பலவற்றிலே தங்கி வாழ்ந்தனர்.

### பழந் தொடர்பு

'சரித்திரகாலத்துக்கு முன்னரே தமிழ் மொழியும், தமிழரின் கடவுள் வழிபாட்டு முறைகளும், தமிழரின் வாழ்க்கை முறைகளும் இலங்கை பர்மா, சாவகம், புட்பகம்: கடராம் முதலிய இடங்களிற் பரவியிருந்தன. நியூசிலந்தின் தொல் குடிமக்கள் தங்களை இன்றும் தென்னிந்தியாவிலிருந்து சென்றவர்களின் வழித்தோன்றல்களாகக் கருதுகின்றனர்.

'வட இந்திய நாகரிகத்துக்கு இப்பொழுது திராவிட நாகரிகம் எனப்படும் தொல் தமிழரின் நாகரிகம் அடிப்படையாயிற்று என்பதை இந்நாடுகளுக்குச் சென்று பார்ப்பவர்கள் நன்கு உணர்வர்'......எனது இந்தச் சிறப்புரை முழுவதையும் சிங்கப்பூர் வானொலி நிலையம் பதிவு செய்து ஒலி பரப்பிற்று.




# கொள்கை வீரரிடம் கொள்ளையடிக்க முயலும்

## கயமைத்தனம்

## கல்முனைத் தொகுதியில் காடையர் அட்டகாசம்

காடைத் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டும், கயமைத் தனத்தை ஊசலாட விட்டும் கல்முனை வாக்காளப்பெரு மக்களுக்குக் கிலியூட்டி வாக்குச்சீட்டுகளுக்கு வலை விரிக்கப்பார்க்கின்றனர் சிலர். கல்லெறியினாலும், பொல்லடியினாலும், காடையரின் தாக்குதல்களினாலும், கண்ணிய மற்றவர்களின் தூற்றலினாலும் தாக்கப்பட்டும்ஆட்சியினர் ஏவிய படை பட்டாளங்களின் அட்டகாசங்களினால் அலங்கோலமாக்கப்பட்டும் கூட தன்நிலைமாறாது வளர்ந்து, இன்று பயனுள்ள பெருமரமாகிவிட்ட தமிழரசுக் கட்சியை மேற்படி காடைத்தனமும் கயமைத்தனமும் சடுகத்தனை தானும்தகர்த்து விட முடியாது.

கல்முனை வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்களை இலகுவில் ஏமாற்றி பதவி பெற்று விடுவதென்பதும் அவ்வளவு இலகுவானகாரியமல்ல.

தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு நல்கும் தமிழ் பேசும் பொது மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் ஊறு விளைவிப்போம், என சில செயலாற்றும் தகமை சிறிதுமற்ற தான் தோன்றிகள் வீராப்புப் பேசித்திரிவதாகக் கூறப்படுகிறது. தமிழ் பேசும் இனத்தோன் ஒருவனைக் கூறு நூறு செய்தே தான் பார்க்கட்டுமே அவன் தன்னுயிரைப் பேணுவதற்காக தன்மானத்தை விட்டுக் கொடுக்கப்போவதில்லை.

### எல்லைகள்

கல்முனைத் தொகுதி தமிழ் பேசும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக் [illegible] வரும் இணைந்த [illegible] கிராமங்களைக் கொண்டது. வடபால் பெரிய நீலாவணை-இந்துக்கள் வாழும் கிராமம். அதற் கடுத்து இருப்பது முஸ்லீம்கள் வாழும் மருதமுனை, அதனருகே உள்ளது இந்துக்களும் கிறிஸ்தவர்

**முத்து முகம்மது**

களும் உள்ள பாண்டிருப்பு. மேற்கே உள்ளது நற்பிட்டிமுனை. இங்கே இந்துக்களும், இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் வாழுகின்றனர். அதற்கடுத்த சேனைக்குடியிருப்பு-இந்துக்களும் கிறிஸ்த[illegible] இஸ்லாமியர்களால் சூழப்பட்ட கல்முனைக்குடி, சாய்ந்த மருதூர் ஆகிய இருகிராமங்கள் உள. இவற்றின் மத்தியிலேயிருக்கும் கல்முனைப் பட்டினம் மும்மதத்தினரும் வாழுமிடம்.

இயற்கையிலேயே மூன்று மதத்தவர்களாலும் இணைக்கப்பட்ட கல்முனைத் தொகுதி ஒற்றுமைக்கு உயர்ந்த எடுத்துக் காட்டாகஇதுகால வரை விளங்கி வந்துள்ளது. ஆனால் மது அரக்கனின் துணை கொண்டு சில மார்க்க விரோதிகள் கல்முனையின் ஒற்றுமைக்கு ஊறு தேடமுயலுகின்றனர்.

மதத்தால் பிரிந்து, பேசும் மொழியால் இணைந்து வாழும் மும்மதத்தினரும் என்றும் ஒன்று பட்டு வாழ்வதிலேதான் இன்பமும் வளமும் அன்பும் பெருக முடியும். இதை விடுத்து சண்டித்தனத்தைத் தலைக்கேற்றி, சமாதானத்தைச் சீர்குலைக்க நினைப்பவர்கள் சமூகத் துரோகிகளேயாவார்.

கல்லோயாப் பள்ளத்தாக்கிலே காலடி எடுத்து வைத்துள்ள சிங்களவர்கள் நம்மை விழுங்கி ஏப்பமிட என்றும் தருணம் பார்த்துத் தவித்துக் கொண்டுள்ளனர். நாம் தொடங்கும் நாசகார விளையாட்டு நம்மினத்தை அவர்கள் வளைத்துவிடவழிவகுக்க வசதி அளித்துவிடும் ஆகவே கல்முனையின் எதிர் காலம் ஒன்றினையே இதயத்தில் ஏற்றி அழிவுப் பாதையினின்று அகலுங்கள் என்று கோருகிறோம்.

### நீதி வழி செல்பவர்கள்

நியாயத்துக்கும் தருமத்துக்கும் தலைவணங்கும் தீரர்கள் நிறைந்த கல்முனை மக்கள் என்றும் நீதி நெறி தழைக்க உழைப்பவர்கள் தங்கள் பேசும் மொழியைப் பெரிதும் பேணுபவர்கள், தங்கள் வாக்குகளை என்றும் தாய் மொழியின் சேவகர்களுக்கே அளித்து வந்துள்ளனர்.

1956ம் ஆண்டு இராசவாசல் முதலியார் எம்.எஸ். காரியப்பர் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து தமிழ் காக்கப் புறப்பட்டார். மக்கள்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 மார்ச் மாதம் 7-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க விதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# இதுவும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனமா?

பொன்னம்பலத்தின் கட்சியும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. தமிழ், ஆங்கிலத் தினசரிகள் இந்த வேடிக்கையான "விஞ்ஞாபனத்தை"ப் பிரகாசமான தலைப்புடன் பிரசுரித்து மகிழ்ந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிபீடத்தில் ஏற்றும் நோக்கத்துடன் கட்டுக் கதைகளையும், கீழ்த்தரமான பொய்ச் செய்திகளையும் நாள்தோறும் வெளியிட்டு நாட்டிலே அமைதியின்மையை ஏற்படுத்தி மக்களிடையே ஒரு வித குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ள இந்த ஏடுகள், பொன்னம்பலம் கட்சியின் பிரசாரத்துக்கும், அறிக்கைகளுக்கும் அசாதாரண முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இதனுல் ஐ. தே. கட்சிக்கும், பொன்னம்பலத்தின் கட்சிக்குமிடையே ஏதோ ஒரு "தொடர்பு" இருக்கக் கூடுமென மக்கள் எண்ணினுல் அதிற் தவறில்லை.

சோல்பரி அரசியற்திட்டத்துக்குத் துதிபாடும் பாமாலையாகவும், மறைமுகமாக ஐ தே. கட்சிக்கு (பெயரைக் குறிப்பிடாமல்) பாராட்டுத் தெரிவிக்கும் நன்றியுரையாகவும் அமைந்துள்ளது பொன்னம்பலம் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்.

தமிழ் பேசும் மக்களுக்கு இதுவரை இழைக்கப்பட்டுள்ள எல்லாவிதமான அநீதிகளுக்கும் அடிப்படைக் காரணம் சோல்பரி அரசியற் திட்டமே என்ற உண்மையை மூடி மறைக்கிறது பொன்னம்பலத்தின் கட்சி;

அது மட்டுமா? இந்த அநீதிகளெல்லாம் தமிழரசுக் கட்சியால் ஏற்பட்டனவே தவிர சோல்பரியின் ஒற்றையாட்சி அரசியற் திட்டத்தினுலோ, அதனை அமுல் நடத்திய சிங்கள அரசாங்கத்தினுலோ ஏற்பட்டவை அல்ல என்ற நம்பிக்கையை மக்களிடையே தோற்றுவிக்க முயன்றுள்ளது பொ. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்.

ஒவ்வொரு அநீதியையும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எதிர்த்துப் பெரும் போராட்டங்களை நடத்திய தமிழரசுக்கட்சி உரிமைகளைப் பறிபோகச் செய்தது என்று கூறுவது விஷமத்தனமாகும். ஒற்றையாட்சிக்குச் சப்பைக் கட்டு கட்டுவதற்காகத் தமிழரசுக் கட்சி மீது அபாண்டங்களைச் சுமத்துவது இழிவான அரசியலாகும்.

20 ஆண்டுகளாகச் செயலாற்றி வருவதாகப் பறைசாற்றும் பொ. கட்சி, கடந்த 10 ஆண்டுகளில் தமிழரசுக் கட்சி என்ன செய்தது என்று கேட்கிறது. இதனைக் கேட்க முன்பு 20 ஆண்டுகளாகப் பொ. கட்சி செய்த சாதனைகளை விஞ்ஞாபனத்தில் விளக்கியிருந்தால் அதில் அரசியல் நேர்மை இருந்திருக்கும்.

1956ம் ஆண்டு தொடங்கி பதவியேற்ற இரு அரசாங்கங்களால் இனநாசக் கொள்கை கையாளப்பட்டதாகக் கூறும் இந்த விஞ்ஞாபனம், அதற்கு முன்பிருந்த ஐ. தே. கட்சி அரசாங்கங்கள் கையாண்ட இனநாசக் கொள்கையை ஏன் மூடி மறைக்க வேண்டும்? அதைப் பற்றி ஒரு சொற் கூட முழு விஞ்ஞாபனத்திலும் இடம் பெற வில்லையே! ஐ. தே. கட்சி ஆட்சியால் எத்தகைய தீங்கும் இழைக்கப்படவில்லை என்ற எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்தவா இந்த முயற்சி? அல்லது மீண்டும் ஐ தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் மந்திரி சபையில் இடம் பிடிப்பதற்காக இப்பொழுதே வழி வகுத்துக் கொள்வதற்கான ஏற்பாடா?

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அபகரித்தற்குக் காரணம் அவர்களின் எண்ணங்களையிட்டும் விசுவாசத்தையிட்டும் சிங்களவர் சந்தேகம் கொண்டது தான் என்று கூறுகிறது பொ. கட்சி சிங்கள ஆட்சியாளரின் "இன ஒழிப்பு"க் கொள்கை தான் உரிமைப் பறிமுதலுக்குக் காரணம் என்ற உண்மையை மூடி மறைக்கும் முயற்சியே இது.

ஜீவாதாரமான உரிமைகளைக் கேட்பதும், தேசிய சுய நிர்ணயத்தைக் கோருவதும் சிங்களவர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துமானுல், அவற்றைக் கேட்காமல் வாய் பொத்தி கைகட்டி அடிமைகளாக வாழவேண்டும் என்று பொ. கட்சி கூறுகிறதா? அப்படிச் சரணுகதி அடைவதும் சிங்கள எசமானருக்கு விசுவாசம் காட்டுவதும் அக்கட்சியின் தலைமைக்கு உகந்ததாயிருக்கலாம். தமிழ் பேசும் மக்கள் என்றுமே அவ்வாறு சரண்புகமாட்டார்கள்.

சிங்கள மக்கள் பாகுபாட்டுக் கொள்கையைத் தொடர்ந்து கடைப் பிடித்தால், தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவர் என்றும் விஞ்ஞாபனத்தில் மற்ருேர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொழுது மட்டும் சிங்களவர் சந்தேகம் கொள்ள மாட்டார்களா? இதற்கு பொ. கட்சி பதிலளிக்கட்டும்!

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்கள் பல இவ்விஞ்ஞாபனத்தில் காணப்படுகின்றன.

தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பெற வேண்டுமானுல், பொ. கட்சியே கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென சூசகமாகச் சுட்டிக்காட்டுகிறது இந்த விஞ்ஞாபனம். இது வெறும் தற்பெருமை!

பொ. கட்சி கோரிக்கைகளைச் சமர்ப்பித்தால் அவற்றைச் சுலபமாக ஆட்சியாளர் நிராகரித்துவிட முடியும். கோரிக்கைகளைப் பெறுவதற்காக இக் கட்சி மக்கள் போராட்டங்களை நடத்த முடியாதென்பதும் பேச்சளவோடுதான் இக் கட்சி நிற்கும் என்பதும் ஆட்சியாளருக்குத் தெரியும். ஆனுல் தமிழரசுக் கட்சி கோரிக்கைகளைச் சமர்ப்பித்தால், அவற்றை நிராகரிக்கப் பெரிதும் அஞ்சுவார்கள் ஆட்சியாளர்கள். நிராகரிக்கப்பட்டால் தமிழரசார் மக்களிடம் சென்று பெரும் போராட்டங்களை நடத்துவார்கள் என்பதையும், அரசாங்கத்தையே கவிழ்த்துவிடுவார்களென்பதும் ஆட்சியாளர் அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளனர்.

உரிமைகளைப் பெறக் கூடிய வலிமையும், துணிவும், மக்கள் ஆதரவும் தமிழரசுக்கட்சியிடமே உண்டு என்பது இதிலிருந்து தெளிவாகிறது. மக்களின் இயக்கமின்றிப் பாராளுமன்றத்தில் பேசுவதால் மட்டும் உரிமைகள் அனைத்தும் கிடைத்து விடுமென்று கூறுவது மக்களை ஏமாற்றுவதாகும்.

சிங்களக் கட்சிகள் எதிர்ப்பதால் சமஷ்டியைப் பெற முடியாது என்று கூறுகிறது பொ. கட்சி. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் காந்தி அடிகளின் சுதந்திரக் கோரிக்கையை எதிர்த்துக் கொண்டு தான் இருந்தது. இறுதியில் எதிர்ப்பைக் கைவிட்டு சுதந்திரம் வழங்க வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டது. எந்தக் கோரிக்கையையும் எதிர்ப்பின்றிப் பெற முடியாதென்பதை பொ. கட்சி அறியா விட்டாலும் மக்கள் அறிவர்.

சமஷ்டியைப்பற்றி தவருன கருத்துகள் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. சமஷ்டி ஆட்சி முறையால் நாட்டில் பிளவோ, தேசிய ஒற்றுமைக்குப் பாதகமோ ஏற்பட முடியாது. ஒற்றையாட்சிதான் தேசிய ஒற்றுமைக்கு வேட்டு வைக்கிறது. அசைக்க முடியாத உண்மையான தேசிய ஐக்கியத்தையும், ஒருமைப் பாட்டையும் சமஷ்டி ஆட்சி முறையால் மட்டுமே இந்நாட்டில் ஏற்படுத்த முடியும். இதனை மூடி மறைப்பதால் பொ. கட்சிக்கு எத்தகைய பயனும் ஏற்படப் போவதில்லை.

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டுமென்று பொ கட்சி தனது விஞ்ஞாபனத்தில் கூறுவதைக் கேட்டு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை 10 இலட்சம் தமிழ் மக்களின் ஜீவாதாரமான உரிமையை அபகரிக்க எந்தக் கட்சி உடந்தையாக இருந்ததோ, அதே கட்சி இப்பொழுது திடீரென அந்த உரிமையை வழங்க வேண்டுமென்று கூறினுல் அதை நிச்சயம் மக்கள் நம்ப மாட்டார்கள். இது ஒரு நரித்தந்திரமென்றே மக்கள் எண்ணுவர்.

இந்த விஞ்ஞாபனத்தில் மிக மிக வேடிக்கையான பகுதி "இந்த வழியிற் திருப்திகரமான தீர்வு ஏற்படாவிட்டால் பாராளுமன்றத்துக்கு அப்பாற்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டு உரிமைகளைப் பெறுவோம்" என்று கூறுவதுதான். கடந்த உரிமைப் போராட்டங்களின்போது பொ. கட்சி எங்கிருந்தது, என்ன செய்தது என்பது அனைவரும் அறிந்த இரகசியமாகும்! போராட்டங்களைக் கண்டு மறைவிடங்களில் ஓடிப் பதுங்கிக் கொண்ட கோழைகளுக்கும் உரிமைப் போராட்டங்களுக்கும் வெகு தூரம் என்பது மக்களுக்குத் தெரியும். இதுவரை மக்கள் போராட்டங்களை நடத்தி அறியாத ஒரு கட்சி இனிமேல் நடத்துமென்று வீருப்பு பேசுவது வெறும் பிரசாரக் குண்டு என்பது மக்கள் அறிவர்.

சுருங்கக் கூறின், இதனை ஒரு தேர்தல் விஞ்ஞாபனம் என்று கூறுவதைவிட திரு. பொன்னம்பலத்தின் ஒரு மேடைப் பிரசங்கம் என்று கூறுவதே சாலப்பொருந்தும். அந்த அளவுக்கு இதில் முரண்பாடுகள் நிரம்பியுள்ளன. எனவே இதனைத் [illegible] மக்கள் முற்ருக நிராகரித்து விடுவார்களென்பதில் ஐயமில்லை.

# மாஜித் தலைவருக்கு மூதூர் மக்கள் அளித்த வரவேற்பு?

## குற்றவாளிக் கூண்டில் சட்ட நிபுணர் நின்ருர்

நீதிமன்றத்திலே சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் திரு. பொன்னபலத்தை, குற்றவாளிக் கூண்டிலேற்றி, மக்கள் குறுக்கு விசாரணை செய்த சம்பவம் மூதூர் தொகுதியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டங்களில நிகழ்ந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மூதூரைச் சேர்ந்த தம்பலகாமம் கிராமத்திற்கு திரு. பொன்னம்பலம் வந்து சேர்ந்தார். அவரை வரவேற்க தம்பலகாமம் தமிழ் பேசும் மக்கள் ஒருவர் தானும் முன்வரவில்லை. தம்பலகமத்தில் வாழும் ஒருவரைப் பிடித்து, கையோடு கொண்டு வந்திருந்த மாலையைச் சூட்ட மாலையைக் கொண்டு வந்தோர் முனைந்தும் முடியவில்லை.

இரவு 7 மணியளவில் கூட்டம் ஆரம்பமானது. திரு. ஸ்ரீதரன் பேசும்போது மட்டுநகர் முதல்வர் திரு. இராசதுரையை தாக்கிபேசினுர், உடனே திரண்டிருந்த மக்கள் 'இராசதுரையைத் தாக்காதே காங்கிரஸ் கொள்கையை மட்டும் விளக்கு' என்ற குரலெழுப்பினர்.

திரு. சிவசிதம்பரம் பேசுகையில், 'செல்வநாயகத்திற்கு அரசியல் படிப்பித்தவர் ஜீ ஜீ என்பதை தமிழ் மக்கள் மறக்கக் கூடாது' என்று பேசினுர். இந்தக் கட்டத்தில் மக்கள் கூட்டம் மீண்டும் கொந்தளித்தது 'பேசாதே! உட்கார்!' என்ற கூக்குரல்கள் எழுந்தன. பொன்னம்பலம் உடனே 'கூட்டத்தைக் குழப்புவோர் போங்கடா, கேட்பவர்கள் இருந்து கேட்கலாம்' என அகங்காரத்துடன் கூறினுர். கூடிநின்ற மக்கள் அவ்வளவு பேரும் எழுந்து சென்று விட்டனர். ஒரு சிலர் மட்டும் இறுதிவரை நின்றனர்.

திரு. பொன்னம்பலம் பேச எழுந்தார் கேள்விக்கணைகள் மக்களிடமிருந்து அடுக்கடுக்காகச் சென்றன.

'இங்கு நான் பதில் சொல்ல வரவில்லை — பேச வந்துள்ளேன். கேட்பவர் கேட்கலாம் — மற்றவர்கள் போகலாம்' என்று கர்ஜனை செய்தார். மக்கள் தொடர்ந்து கூக்குரல் எழுப்பினர். 'நரிகள் ஊளையிடுகின்றன. இப்போது ஊளையிடுபவர்கள் அடுத்த பிறப்பில் நரிகளாய்ப் பிறப்பார்கள்' என்றும் திரு. பொன்னம்பலம் சாபமிட்டார். மக்கள் மீண்டும் கொதிப்படைந்து ஆர்ப்பரித்தனர் — கேள்விகளும் கூக்குரல்களும் பொன்னம்பலத்தைப் பேசவிடாமற் செய்துவிட்டன. 'தான் பேசியே தீருவேன்' எனச் சொல்லி அவர் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் தமிழரசுக் கட்சியைத் திட்டித்

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழரசுக் கட்சி பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ள மட்டக்களப்புக்கு விமானமூலம் வந்துசேர்ந்த தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை ஆயிரக் கணக்கில் திரண்டுநின்று மக்கள் வரவேற்றனர் திரு. சி மூ. இராசமாணிக்கம் செனட்டர் மு. மாணிக்கம், திரு. செ இராசதுரை, திரு. அ. அமிர்தலிங்கம், ஜனப் மசூர் மௌலான, திரு. பொ. மாணிக்கவாசகர், திரு சாம். தம்பிமுத்து ஆகியோர் மலர்மாலைகளுடன் மக்கள் மத்தியில் காணப்படுகின்றனர்.

## வேட்பாளர் பிரலாபம்

நடந்த 25-ம் திகதி மட்டக்களப்பில் திரு. பொன்னம்பலம் உரை நிகழ்துவதைக் கேட்கச் சென்ற சகல மக்களும் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியிருந்தது. அவர் கொள்கை விளக்கமோ திட்டங்களோ கூறவில்லை. சதா தமிழரசாரை வைது கொண்டேயிருந்தார். இதனுல் மக்கள் பெரும் அதிருப்தியடைந்தனர்.

திரு. பொன்னம்பலத்தின் வருகையால் மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் காங்கிரசின் மானம் பறிபோனதே தவிர எள்ளளவும் தங்களுக்குச் சாதகமாக நிலை மாறவில்லை என்று ஒரு காங்கிரஸ் வேட்பாளர் கூறினுராம். அவர் வராதிருந்தால் ஓரளவு கட்டுக் காசையாவது காப்பாற்றும் வண்ணம் வாக்குகள் பெற்றிருக்கலாம். திரு. பொன்னம்பலம் வருகை கட்டுக் காசுக்கே ஆபத்தை ஏற்படுத்திவிட்டது, என்று அவர் மேலும் தெரிவித்தாராம்.

தமிழரசுத் தலைவர்கள் பங்கு பற்றிய கூட்டங்கள் அனைத்திலும் மக்கள் சமுத்திரம் அலை மோதியதுடன், அவர்கள் திருப்திப்படும் வண்ணம் உண்மையான கருத்துக்கள் அடங்கிய உரைகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகள் பெற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாஞல், நமது தமிழ் மொழியையும், நமது இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களையும், நமக்கே உரித்தான பிரதேசத்தையும், நமது பாரம்பரியமான பண்பாடு, கலாச்சாரங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். இதற்கு ஒரே வழி நமது பிரதேசத்தை நாமே ஆளும் உரிமையைப் பெறுதலே.

இலங்கையின் ஐக்கியத்தைக் குலையாமல் நமது ஆட்சியுரிமையைப் பெறக் கூடிய வழி சமஷ்டி என்று கூறப்படும் இணைப்பாட்சி ஒன்றேயாகும். ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக சுயாட்சித் தமிழரசையும், முஸ்லிம் அரசையும் நிறுவி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைக் காண்பதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும். சுயாதீனம் நமது பிறப்புரிமை. இதைப் பெறும் வரையில் அல்லும் பகலும் உழைப்போம். எத்துணைத் தியாகம் செய்ய நேரிடினும் தயங்க மாட்டோம்.

## வாழ்விடம்

மக்களுக்கு முதல் தேவையானது நிலம். நாடற்ற மக்கள் நாளடைவில் அழிந்தொழிவார்கள். இந்நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் எமது பாரம்பரிய சொத்து. எம்மினத்தின் வாழ்வின் அடித்தளம் அதுவே. இப்பிரதேசமே எமக்குள்ள ஒரே பாதுகாப்பு 1958-ம் ஆண்டு எம்மினத்திற்குப் பாதுகாப்பளித்தது இப்பிரதேசம் தான். அகதிகளாக வந்து அடைக்கலம் புக எமக்கென்று ஒரு வாழ்விடம் இல்லாதிருந்தால் தமிழ் மக்களுடைய கதி என்னவாகியிருக்கும்? எமது இந்த நிலத்தைப் பிறர் அபகரிக்க ஒரு போதும் விடமாட்டோம்.

அரசாங்கத்தின் சிங்களக் குடியேற்றத்தினுல் எமது பிரதேசம் பறிபோவதோடு பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதித்துவமும் பறி போய்க் கொண்டு வருகிறது. சிங்களக் குடியேற்றத்தைப் பூரணமாக நிறுத்தி எம் வாழ்விடத்தைக் காப்பது எங்கள் தலையாய கடமை.

## தமிழ் மொழி

இந்நாட்டில் சிங்கள மக்களும், தமிழ் பேசும் மக்களும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் பெற வேண்டுமானுல் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் நாடு முழுவதும் சம அந்தஸ்தைப் பெற வேண்டும். சிங்கள மக்களுக்குச் சிங்களம் எப்படியோ தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழ் அப்படியே சட்ட பூர்வமாக இருக்க வேண்டும், சிங்களம் மாத்திரம் என்ற நிலையை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்,

## குடியுரிமை

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்திற்கு அடிக்கப்பட்ட முதல் அடி பிரசாவுரிமைச் சட்டங்களாகும். தமிழ் பேசும் மக்கள் முழுப் பேரும் சந்தேகப் பிரசைகளாக்கப்பட்ட தோடு மலை நாட்டுத் தமிழ் மக்கள் 10 லட்சம் பேர் நாடற்றவர் ஆக்கப்பட்டார்கள். 1949-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத் தேர்தற் சட்டத் திருத்தம் அவர்களுடைய வாக்குரிமையையும் பிடுங்கி, பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவத்தையும் குறைத்தது சனத்தொகையில் 69 விகிதமான சிங்கள மக்கள் 80 விகிதத்துக்கு மேற்பட்ட பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்ற வழி வகுத்து சனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கின, இச்சட்டங்கள். இவற்றுக்கு உடந்தையாக இருந்த தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இன்று தமிழ் இனத்தின் உரிமையைக் காப்போம் என்று கூறுவது விந்தையே.

தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட சூழ்நிலை உருவானதற்குக் காரணமே இந்தக் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறிக்கும் சட்டங்களன்றி வேறில்லை. சமீபத்தில் கைச்சாத்தான ஸ்ரீமாவோ—சாத்திரி ஒப்பந்தம் இந்த அக்கிரமத்திற்குச் சிகரம் வைப்பதுபோல அமைந்தது. இந்நாட்டின் வளத்திற்காக உழைத்த 5 1/4 லட்சம் தமிழ் மக்களை அவர்களுடைய விருப்பமின்றி நாடு கடத்தும் சதியே இவ்வொப்பந்தம்.

மலைநாட்டுத் தமிழ் மக்களுடைய இயக்கங்களென்று கூறிக் கொள்ளும் காங்கிரஸ் இரண்டும் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் இவ்வொப்பந்தத்தின் கொடுமையை எடுத்து விளக்கி மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டிய பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரியது. அம் மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக எவரையும் நாடு கடத்துவதை எதிர்க்கவும் இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண பிரசாவுரிமை உண்டென நிலைநாட்டவும் தமிழரசுக் கட்சி சங்கற்பம் பூண்டுள்ளது.

## கல்வி

ஒவ்வொரு குழந்தையும் தன் தாய்மொழி மூலம் கல்வி பெறுவது உலகு ஏற்றுக் கொண்ட உரிமையாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வசிக்கும் தமிழ் பேசும் குழந்தைகளுக்குத் தமிழ்மூலம் கல்வி கற்கும் வசதிகள் படிப்படியாக மறுக்கப்பட்டு வருகின்றன 'நாடற்றவர்' என்போரின் குழந்தைகள் சிங்களம் மூலமே கல்வி கற்க வேண்டுமென்றும் வெள்ளையறிக்கை சியாக நாம் எதிர்க்க வேண்டியதொன்றாகும்.

இந்நாடு முழுவதும் வாழும் தமிழ் பேசும் குழந்தைகள் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழில் கற்கும் உரிமைக்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி போராடும். அதன் பொருட்டுப் பூரண வளர்ச்சி பெற்ற நுண் கலைக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி ஆகியனவும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தமிழ் பல்கலைக் கழகமும் நிறுவப்பட வேண்டும்.

தமிழ்ப் பிரதேச பாடசாலைகளின் தரத்தைக் குறைக்கும் முயற்சிகளையும், சிங்களக் கல்வியையோ சிங்களவரையோ தமிழ்ப் பிரதேசத்தில் திணிக்கும் முயற்சியையும் எதிர்ப்போம்.

# தமிழ் ஊழியருக்கு மீண்டும் கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்

## தொழிற் திணைக்களத்தில் கொடுக்கப்பட்டது

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்கள் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. கடந்த வியாழக்கிழமை (4-3-65) தொழிற் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. எஸ். நவரத்தினம் என்பவருக்குக் கட்டாய ஓய்வு முன்னறிவித்நல் தொழிற் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்களை ஏற்கனவே பெற்ற நூற்றுக்கதிகமான தமிழ் அரசாங்க ஊழியர்கள் இவ்வருட நடுப்பகுதியில் வேலையிழப்பை எதிர்நோக்கியுள்ளார்கள்.

தொழிற் திணைக்களத்தைச் சேர்ந்த எழுதுவினைஞரான எஸ். நவரத்தினம் என்பவருக்கு கடந்த வியாழக்கிழமை கட்டாய ஓய்வு முன்னறவித்தல் வழங்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்னர் பல தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு முன்னறவித்தல்கள் தமிழரசுத் தலைவர்களின் தலையீடு காரணமாக இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்கள் நிதி அமைச்சர் டாக்டர் பெரேராவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள திறைசேரியின் சுற்றுநிருபம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றது. ஆட்சி மொழியான சிங்களத்தில் தகைமை பெருத தமிழ் ஊழியர்களுக்கு இவ் வறிவித்தல்கள் ஓராண்டுக்கு முன்னரே வழங்கப்பட்டன.

இவ்வறிவித்தலின் பிரகாரம் பதவியிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இலக்கான பல தமிழ் ஊழியர்கள் அரசியற் கலப்பற்ற பொது சேவை ஆணைக் குழுவிற்கு மனுச் செய்து ஒரு வருட அவகாசம் பெற்றுர்கள். ஒரு வருட அவகாசம் பெற்றவர்களிற் பலர் இவ் வருட நடுப்பகுதியில் கட்டாயமாகப் பதவியிலிருந்து வெளியேற்றப்படவிருக்கிறுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பதவி நீக்கங்களுக்கும் கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்களுக்கும் நிதி அமைச்சே பொறுப்பாகும்.

திரு. நவரத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டாய ஓய்வு முன்னறிவித்தற்கடிதமும் தனிச்சிங்களத்திலேயே அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## அரசாங்க சேவை

தமிழ் மூலம் கல்வி பெற்றவர்கள் தமிழ் மூலமே பரீட்சைகளை எடுத்துத் தகுதியின்படி அரசாங்க சேவையிற் சேரும் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். ஏற்கனவே சேவையிலிருப்போர் தமது நியமனத்தையோ, சம்பள உயர்வையோ, பதவி உயர்வையோ, சலுகைச் சம்பளம் போன்றவற்றையோ மொழிச் சட்டத்தின் காரணமாக இழக்கச் செய்யக்கூடாது. ஏற்கனவே எவ்வகையிலாவது பாதிக்கப்பட்டவர்கள் இழந்த பதவிகளையோ, உயர்வுகளையோ பெறுவதற்குத் தமிழரசுக் கட்சி உழைக்கும்.

## தொழில், நிலம் வழங்கல்

அரசாங்க சேவையில் கடந்த காலங்களிற் பெற்றிருந்த பங்கை இழந்து வரும் தமிழ் பேசும் இளைஞர்களுக்குத் தொழில் வசதிகளையும் நிலத்தையும் வழங்கி அவர்கள் பொருளாதார வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தமிழ்ப் பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, நிலம் வழங்கல் விதிகளைத் தளர்த்தி தமிழ் பேசும் இளைஞர்கள் விவசாயத்திலீடுபட ஊக்கம் அளிக்கப்பட வேண்டும்.

நவீன மீன்பிடி முறைகளில் தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்ற வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். திருகோணமலை, காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் கைத்தொழில்களை வளர்ப்பதின் மூலமும் வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும். இவ்வகையிலேயே தமிழ் இனத்தின் வருங்கால வாழ்வு வளமுள்ளதாக முடியுமென்பது எமது நம்பிக்கை.

## சமதர்மமும் சனநாயகமும்

தென்னிலங்கையில் சமதர்மக் கட்சிகள் என்போரும் சனநாயக்காக் கட்சிகள் என்போரும் மோதுகின்றனர். ஆனுல் சமதர்மத்தின் அடிப்படை நாட்டில் வாழும் பல்வேறு இனங்களின் சமத்துவமே என்பதை இச்சமதர்மக் கட்சிகள் மறந்து விட்டன.

தனிச் சிங்கள அடிப்படையில், தனிப் பௌத்தம் என்ற கொள்கையோடு சமதர்மத்தை இந்நாட்டில் நிலைநாட்டுவோமென்று கூறுவது கேலிக்கூத்தாகும். சிறுபான்மையோருக்கு அடிப்படை அரசியல் உரிமைகளை மறுத்துக் கொண்டு சனநாயகத்தைக் காப்போமென்று கூறுவதும் வேடிக்கையே.

சாதி, சமயம், இனம், ஆண்—பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது கல்வி தொழில் முதலிய துறைகளிற் சம சந்தர்ப்பம் அளிக்கும் சோஷலிச பொருளாதார முறையினை ஏற்படுத்துதலே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையாகும்.

தமிழ் பேசும் மக்களிடையே நிலவும் உயர்வு தாழ்வுகளையும் தீண்டாமை என்ற நோயையும் வேரறுக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதி பூண்டிருக்கிறது.

மக்களுடைய பேச்சுரிமை, எழுத்துரிமை, பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றைப் பறிக்கும் எந்த முயற்சியையும் எதிர்ப்போம். மத சுதந்திரத்தை நிலைநாட்ட உழைப்போம்.

இந்நாட்டில் சனநாயகத்தைப் பாதுகாக்கவும் உண்மைச் சமதர்மத்தை நிலை நாட்டவும் உழைப்போம்.

இந்நாட்டிலுள்ள குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமும் நீதியும் கிடைக்க வழி வகுப்பதிலும், எமது தாய் நாடு பூரண வளர்ச்சி பெறும் பொருட்டு உழைப்பதிலும் தன்மான உணர்ச்சியுள்ள சகோதரர்களாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எமது சிங்கள சகோதரர்களுக்குப் பரிபூரண ஒத்துழைப்பை நல்குகிறோம். நேசக்கரம் நீட்டுகிறோம்.

## காங்கிரஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ததும், மறைந்த தலைவர்களான அமரர் வன்னியசிங்கம், திரு. ஏகாம்பரம், திரு. கந்தையா, திரு. இராசவரோதயம் ஆகியோருக்கு இரு நிமிடங்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மக்கள் அனைவரும் எழுந்து நின்றனர். அத்துடன் மட்டும் நில்லாமல், 'தமிழ் பேசும் இனத்தின் ஒப்புயர்வற்ற தலைவர், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் இக் கூட்டத்துக்கு வருகை தர முடியவில்லை. ஆகவே மற்றவர்களைப் பேச அழைக்கிறேன்' என்று கூறினுர். மேடையிலிருந்தவர்களின் முகங்கள் சுருங்கி விடவே மக்கள் கர ஒலி எழுப்ப ஆரம்பித்தனர். சிலர் ஓடிச் சென்று தலைவரை அப்புறப்படுத்திவிட்டு வேருெருவரைக் கொண்டு கூட்டத்தைத் தொடக்கினர்.

'தமிழரசுக் கட்சியின் இலக்கும் கொள்கைகளும் கிராம மக்கள் அனைவரினதும் உள்ளங்களில் இடம் கொண்டு உதிரத்தில் ஊறியிருக்கும் போது போலிகளின் போக்குக்கு எங்கே இடம் கிடைக்கப்போகிறது' என்று ஒரு பார்வையாளர் கூறினுர்.

---

## மாஜித்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்த்தார் - முடிவில் பொலிசாரை அழைத்து தன்னுடன் தம்பலகாமக் கிராமத்திலிருந்து வெளியேறும் வரை' காவலாக வரும்படி கேட்டுக்கொண்டு பரிவாரங்களுடன் வெளியேறினுர்.

வங்கி முதலியவற்றிற்குப் பணம் எடுத்துச் செல்ல நேர்மையான இளம் வயதுடையவர் தேவை. பிணைப் பணம் செலுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

மனுச் செய்க,

Sivagnanam Bros,
71, Prince Street,
Pettah,
Colombo-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக் கவர்ச்சி

இவ்வாரச் சிறுகதை

வானம் உறுமியது—

நெடுங்கடலின் நீலத் திரைகள் ஆர்ப்பரித்தன—புதுமணத் தம்பதிகளின் நெஞ்சுகளைப் போன்று கடல் பொங்கியது. மின்னல் மின்னியது அந்த மின்னலின் ஒளியில் வையம் புது அழகை அடைந்தது—மழை 'சோ' எனப் பொழியலாயிற்று.

அந்த வேளையிலே—

மனித நடமாட்டம் குறைந்தது-அந்த மழையில் ஓர் உருவம் நடந்து கொண்டிருந்தது; மழையில் தொப்பலாக நனைந்திருந்தும் அந்த உருவம் இயற்கை அழகைச் சுவைத்துக் கொண்டிருந்தது. பொங்கி வரும் பேரலைகளின் அழகையும் முத்து முத்தாய் மேனியில் தவழும் மழை நீரின் அழகையும் அந்த உருவம் சுவைத்துக்கொண்டிருந்தது.

விண் முழங்கியது—

கடலை ஒட்டிய தென்னந் தோப்புக் குடிசையில் இருந்தபடி அந்த உருவத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன் இடியின் பேரொலி அந்த உருவத்தை அச்சுறுத்தியதாகத் தெரியவில்லை. சென்றுவது இழுத்து வரலாம் என்று எண்ணினேன்—அதற்குள் 'அந்த உருவம் பயித்தியமாகஇருந்தால்?' ...என எண்ணமிட்டது, என் மனம்.

துணிந்து இழுத்துவர நடந்தேன். அதற்குள் அந்த உருவம் தோப்பை நோக்கி வந்துகொண்டிருந்தது. அந்த உருவத்தை வரவேற்று மேலாடை தந்து துவட்டச் செய்தேன். புன் முறுவலோடு அந்த உருவம் எனக்கு நன்றி தெரிவித்தது.

'நீங்கள் இந்த ஊருக்குப் புதியவர் போல் தெரிகிறது'—என இழுத்தேன். 'ஆமாம்' என அந்த உருவம் என் உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. என் உரையாடல் பிடிக்கவில்லை என அறிந்து ஒதுங்கிக் கொண்டேன்.

அந்த உருவம் பரிதாபத்தோடு என்னைப் பார்த்தது. என்னால் சும்மா இருக்க முடியவில்லை.

'ஏதோ குழப்பம் போலிருக்கிறது' என்றேன்.

'குழப்பமில்லை—ஒரு திருப்பம்' எனப் புதிரிட்டபடியே சொல்லலாயிற்று அந்த உருவம்.

'நண்பரவர்களே! நீங்கள் யாராக இருந்தாலும் சரி—எனக்குக் கவலையில்லை—உங்களிடையே என் வாழ்வின் இரகசியத்தைச் சொல்வதால் என் மனப்பாரம் குறையும்—' என்று சொல்லியபடியே அந்த உருவத்தின் குரல் மென்மை அடைந்து கண்ணீர் நீர் துளிர்க்கலாயிற்று—

'அவளை இதேகடற்கரையில் அன்றொரு நாள் சந்தித்தேன்—எங்கள் சந்திப்பில் கண்கள் பேசின—எனக்கும் அவளுக்கும் காதல் அரும்பியது—அச் சந்தப்பு நீண்டு நிலைக்கும் படியான வாய்ப்பு அவளுக்கும் ஏற்பட்டது, எனக்கும் ஏற்பட்டது—அலுவலகத்தில்.

ஏதோ இது காதல் கதையாகயிருக்குமென எண்ணிவிடாதீர்கள்—அவள் மாமா ஒரு பெரிய சாத்திரியாராம்—அவர் என்னைப் பார்க்க வேண்டும் என்றாராம். சென்றேன் விபரமெல்லாம் கேட்டார்—சொன்னேன். அந்தப் பெரிய சாத்திரியார் நாள் நட்சத்திரம் பார்க்காமல் எங்கள் இருவர் திருமணத்தையும் நடத்தி வைத்தார்.

சாத்திரிமார்களே இப்படித்தான்—!

அவளை மணம் புரிந்த நாள் முதலாய் சில கட்டுப்பாடுகள் கொண்டுவந்தேன்—அக் கட்டுப்பாடுகள் எங்கள் காதலை வளர்ப்பனவாதலின் அவளிடம் சொல்லிவந்தேன்—என்னுரிமையில் தலையிட உங்களுக்கு அதிகாரமில்லை என எனக்குக் கட்டுப்பாடு விதித்துவிட்டாள் அவள்—!

ஒத்துப் போகும் மனப் பண்பு அவளிடத்தில் இல்லை; அலுவலகத்தில் அனைவரிடமும் அரட்டை அடிப்பாள் — கணவனோடு கருத்தொன்றிப் பேசாள்-!

என்ன செய்வதென்று எண்ணினேன்!— இப்படிப் பட்ட பெண்கள் நாட்டிற்குத் தேவையில்லை—என்று மனம் எண்ணியது—அவளைக் கொலை செய்து விட்டேன்...'என்று அந்த உருவம் கூறியபோது என் உடல் நடுங்கியது.

'நண்பரவர்களே! என்னைப் பெரிய கொலைகாரன் என எண்ணுவீர்கள்—கொலைகாரனாக ஒருவன் என் ஆகிறான் என்பதைச் சிந்திக்க வேண்டும்—

அவளுடைய புறக் கவர்ச்சியில் மயங்கிக் காதலித்தேன்-அதைவிட அகக் கவர்ச்சி முக்கியமானது, காதலுக்கு என்பதை இன்று உணர்கிறேன்.

காதல் சாம்ராஜ்யத்தில் உணர்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பதா? உடலுறவில் மட்டும் கருத்து ஒருமித்தால் போதுமா? அல்லது ஏனைய பிற கருத்துகளிலும் கருத்தொருமித்தல் வேண்டுமா?

இது பற்றி எந்த இலக்கியத்திலும் திட்டவட்டமாக கூறுமல் கவிஞர்கள் கற்பனை செய்கிறாகள்—எனக் காதல் இலக்கியங்களைத் தாக்கத் துவங்கியது, அந்த உருவம்.

நான் இடைமறித்தேன்—ஆனால் அந்த உருவத்தையே நோக்கினேன்.

அந்த உருவம் பேசியது! 'அவள் வடதுருவம்—நான் தென் துருவம்! அவளைக் கண்ணகியாகக் காண விரும்பினேன்;— அல்லது மாதவியாகக் காண விரும்பினேன்; அவள் பாஞ்சாலியாக விழைந்தாள்—உடலுறவில் அல்ல—கருத்தளவில்.

உலக அழகி கிளியோபாத்திராவாக விளங்க ஆவல் கொண்டாள்—அவள் உடல் பலரிடம் துவண்டது; இவள் கருத்து பலரை விரும்பியது.

இவளால் வீடோ நாடோ அடையும் பயன் யாது?' என்றபடியே வழியும் கண்ணீரை மேலாடையால் துடைத்துக் கொண்டது.

வானம் ஒருபால் வெளுத்து விட்டது—

மழையும் நின்றது-கீழ்ப் பக்கத்து அடிவானில் வானவில் வளைந்து காணப்பட்டது. அதில் காணப்பட்ட பச்சை, சிவப்பு, ஊதா நிறங்களை அந்த உருவம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது—.

கடைசியாகக் கூறினேன்—

'பிடிக்கவில்லை என்றால் பிரிந்திருக்கலாம்—கொலை செய்ய வேண்டிய...' என முடிப்பதற்குள், அந்த உருவம் நடந்தபடியே 'ஆம்! செய்திருக்கலாம்—பாம்பு, தேள் முதலியவற்றைக் கண்டால் கொல்வதில்லையா—அது போலச் செய்து விட்டேன்-ஆனாலும் கொன்றது ஒரு வகைக்கு நல்லதே. என் நாட்டிற்கும், குடிக்கும் இழுக்கு ஏற்படாதல்லவா?'...என்றவாறு அந்த உருவம் சென்றுவிட்டது.

ஐந்து நாள் கழித்து பத்திரிகையில் செய்தி வந்தது—

'கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் அலுவலகத்தில் பணியாற்றும் தன் மனைவியைக் கொலை செய்துவிட்டு சில நாள் தலைமறைவாய் இருந்து பேலீசில் இன்று சரண் அடைந்தார். அன்று மாலையே போலிசு நிலையச் சிறைக்குள் தற்கொலை செய்து கொண்டார்.

வானவில் அழகாகக் காட்சி தருகிறது—கண்ணிற்கு மட்டுந்தான் இன்பம், ஆனால் மழை வேண்டும். உழவர்கள் அழகற்ற கருமுகிலைத்தான் விரும்புவர்,—பேராசிரியர் அக அழகை நாட வேண்டியவர்; புற அழகின் வடிவிலே மயங்கி அதைப் போன்றே அவரும் மறைந்தார்.

—அரு. கணேஷ்

# தேனீருக்கும் சுருட்டுக்கும் விலையாகும் தமிழர்கள்

**ஆ**ருவளியைச் சாதகமாக வைத்து வாக்குப் பிச்சை கேட்க முனைபவர்களின் வஞ்சகத் திட்டத்தை திருமலை மக்கள் நன்கு அறிவார்கள். ஒரு கோப்பை தேநீருக்கும் சுருட்டுக்கும் வாங்கிவிடக் கூடிய தமிழர்கள் இன்றும் உள்ளார்கள் என்பதற்கு இவர்களும் உதாரணமாக உள்ளனர். இவ்வாறு கடந்த 21-2-65-ல் திருமலை முற்றவெளியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் பேசிய திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது 'தமிழ் பேசும் மக்கள் இந் நாட்டில் வாழுவதற்கு அவர்களுக்கென்று ஒரு பிரதேசம் இருக்க வேண்டும். 1958-ம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தில் கப்பலில் ஏறி வந்த தமிழ் மக்கள் தங்களுக்கென ஒரு பிரதேசமொன்று இருந்த படியால் நிம்மதியாக வாழ முடிந்தது. இல்லையேல் இந்து மகா சமுத்திரத்தைத் தான் தஞ்சமென்று அடைந்திருப்பார்கள். இந் நிலையில் தமிழ் பேசும் இனத்துக்குரிய பிரதேசங்களை பறிக்க வேண்டுமென்று 1947 லேயே திட்டமிட்டு செயலாற்றி வந்த யு. என். பி. கட்சி இன்று திருகோணமலையில் தமிழர் ஒருவரை தனது வேட்பாளர் ஆக நிறுத்தியதென்றால் அது 'ஒரு கோப்பை தேநீருக்கும் சுருட்டுக்கும்' வாங்கிவிடக்கூடிய தமிழர்கள் இன்னும் இருக்கிறார்கள். என்ற பழம் நம்பிக்கையையே கொண்டுள்ளது போல் தெரிகின்றது.

இன்று யு. என். பிக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் 1963-ம் ஆண்டு நடந்த திருமலை இடைத்தேர்தலில் போட்டியிட விரும்பி தமிழரசுக் கட்சிக்கு மனுப்பண்ணியவர். அமரர் இராஜவரோதயம் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்ய இவருக்கு தகுதியில்லையென்று கண்ட தமிழரசுக் கட்சி இவருக்கு நியமனத்தைக் கொடுக்கவில்லை.

'அன்று தமிழரசுக் கொள்கைகளை ஏற்று நியமனம் கோரிய இவர், தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் தமிழர்களுக்குதவாது என்று இன்று கூறுவது திராட்சைப்பழத்துக்கு ஆசைப்பட்டு எட்டாமல், சீ! இந்த திராட்சைப் பழம் புளிக்கும்' என்று கூறும் நரியின் கதைபோல்தான் உள்ளது.

நான் வென்றால் மந்திரி, விழுந்தால் செனட்டர்' என்று கூறும் இவர் 'வாக்கு வேட்டையாட' சூறாவளியை பயன்படுத்துகின்றார். சூறாவளியைக்காட்டி திருகோணமலை தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை, சுதந்திர தாகத்தை ஒடுக்கிவிடலாமெனக் கனவு காணும் இவருக்கு மார்ச் 22-ம் திகதி திருமலை தமிழ் பேசும் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள். இது உறுதி.

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
'சுதந்திரன்'

# உன் கோலம் மாற...!

**அ**ன்று அரசு கட்டிலேறி, அணி, தேர், புரவி, ஆட்பெரும் படையுடன், முரசு கொட்டியாண்ட மூவேந்தர் பரம்பரையே!

முறம் கொண்டு,வெம்புலி விரட்டிய நம்மூத்தோர—மறத்தமிழ்ப் பெண்டீர் வழி வழி வந்தவனே!

பாடுபடவும் தயார்! அதைப் பங்கிட்டு வாழவும் தயார்! பலன் பெறவும்—தயார்! என்று சாதி மத பேதம் காட்டாது பண்போடு வாழ்ந்திட்ட நம் பாட்டன் வழித்தோன்றலே!

நீயா...?தமிழினத்தின் தனிப் பெரும சொத்தாம்—தன்மானம்; அதை இழந்து நம் எதிரிக்கு வால்பிடித்து, சாதியென்ற கமண்டலத்தைத் தலைமேல் சுமந்து, நீரோடும் நெல்வயல்கள், நிறைந்திருக்கும் களஞ்சியமாம், வீரர்களின் கோட்டமாம், மறவர்படைப் பாசறைக்குள் வோட்டுப் பிச்சை கேட்டு, அடியெடுத்து வைக்கின்றாய்? சீச்சீ அவமானம்! அடியெடுத்து வைக்காதே...!

நாங்கள் தமிழ் பேசுபவர்கள்! தன்மானத்தோடு வாழப்பிறந்தவர்கள்!வீரமே எங்கள் உயிர்! வெற்றியே எங்கள் மானம்! தொட்ட கைகள் துடிக்கும், கேட்

'மறவன்'

செவி இனிக்கும், தோள்களெல்லாம் விம்மியெழுப், சிம்மக்குரலெழுப்பும், வீரகாவியமாம் புறநானூற்று வரிகளிலே புகழ்தேயப் பெற்றவர்கள் நாங்கள்! புறமுதுகு காட்டமாட்டோம். தோள்தட்டியே எதிரியின் குரல்வளையை நெரித்திட்ட கரம் கொண்ட நாங்கள், என்றும் தாழ்பட்டுத் தலை குனிய மாட்டோம்.

வரலாறு என்றும் எங்களைக் கோழையென்று கூறியது கிடையாது. வீரர்கள் என்றே விளக்கம் தந்திருக்கிறது. அடிமைகள் எங்களுக்குண்டு; ஆனால்! நாங்கள் அடிமையாகியது இல்லை! அடிமையாகப் போவதும் இல்லை!

அதோ! ஆரவாரம்! கல் தோன்றி, மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த நம்தமிழ்,—மூவேந்தர் மடிவளர்த்த முத்தமிழ்த் தாய்—நாவேந்தர் கைவளர்த்த நம்மினத்து அன்னை—கலங்கிடும் நிலைகண்டு; அவள் கண்ணீர் துடைக்க; அடிமைவிலங்கொடிக்க—உரிமை பெற்றிட—நானிலத்தில் தமிழோசை கேட்டிட, சாவா—வாழ்வா?இரண்டில் எதுவரினும் ஏற்போம்—அஞ்சோம் என முடிவெடுத்து, அடி வைத்து வீறு நடை போட்டுத்திரண்டு வரும் மறக் குலத்தமிழர்படை—தமிழரசுக்கட்சி. அவர்களைக் கண்டு மக்கள் எழுப்பிடும் ஓசை!

கேட்கிறதா உன்காதில்...? இப்போதாவது உன் மயக்க நிலை தெளிகிறதா?

மயக்கம் தெளிந்தால்;வழி விட்டு விலகு—விலகினால் போதாது...

புறநானூற்றைப்புரட்டிப் பார்...! கலிங்கத்துப் பரணியின் வீரவரிகளைப் படித்துப் பார்...!

அந்த எழுச்சிமிக்க வார்த்தைகளால்;உன் உள்ளம் குமுறும், கொந்தழிக்கும், அனல், புனல், புயல் அத்தனையையும் கிளப்பும் நீ கொண்டகோலமும் மாறும்.

# அழடு சுடும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இனிய உணர்வில் இருந்த கணேசனிடம் திடீரென்று ஒரு கேள்வியைக் கேட்டு அவனைத் திணற அடித்தார் துரை.

'உங்களுக்கும், சரோஜா என்ற ஒரு பெண்ணுக்கும் இருக்கின்ற உறவையும், அவள் உங்கள் மீது காட்டுகின்ற அக்கறைக்குமுள்ள காரணத்தையும் நான் தெரிந்து கொள்ளலாமா?'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிஸ்தானும் தமிழரசுக் கட்சியும்

# முஸ்லிம்களின் தனியரசு உரிமையை

# திருமலைத் தீர்மானம் வலியுறுத்துகிறது

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் முக்கிய உறுப்பினராய் விளங்குபவர்கள் முஸ்லிம் மக்கள். ஏனைய தமிழ் பேசும் மக்களோடு மதத்திஞல் மாறுபட்டிருந்தாலும் பேசும் மொழியிஞல் அவர்கள் ஒருவர்தாம்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் அங்கு வதியும் தமிழ் மக்களோடு ஒருசில விடயங்களில் எத்தகைய கருத்து வேறுபாடு கொண்டிருப்பினும் பேசும் மொழியும் வாழும் இடமும் அவர்களைப் பிரிக்க முடியாத அளவு இணைத்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் நிலையற்ற சில அற்ப சலுகைகளுக்காக முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் இனத்திலிருந்து பிரிந்து சிங்களவரிடம் கையேந்தி நிற்கத் துணிவார்களேயாஞல் அது உண்மையில் வெட்கித் தலைகுனிய வேண்டிய செயலாகும்.

### ஜின்ஞ கர்ச்சனை

"நாம் கேட்பது உரிமைகள், வெறும் சலுகைகளுக்காகக் கெஞ்சவில்லை' (we demand our rights but do not beg for concessions) என்று பாகிஸ்தானை உருவாக்கிய சிற்பி ஜஞப் ஜின்ஞ அன்று ஆணித்தரமாய் அறைந்த வீரம் செறிந்த கூற்றை அவரை வழுத்தி வாழ்த்தும் அவர் வழிவந்த முஸ்லிம் சமுதாயம் என்றும் மறப்பது நியாயமாகாது.

### பேராபத்து

இன்று இலங்கைவாழ் மக்கள் அனைவரையும் பொருளாதார நெருக்கடி சூழ்ந்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் மக்களை பொருளாதார நெருக்கடி வாட்டி வதைக்கிறதென்பதை அண்மையில் நாம் கிழக்கு மாகாணத்தை சுற்றிப் பார்வையிட்ட போது நேரில் காணக்கூடியதாக இருந்தது. முஸ்லிம்மக்களின் கல்வி நிலை சமூக நிலை கூட மிகவும் கவலை கொள்ளத்தக்க அளவில் தாழ்ந்திருக்கிறது. இவை அனைத்திற்கும் மேலாக அவர்களைச் சூழ்ந்திருக்கும் பெரும் பேராபத்து சொற்களிலே எடுத்துக் கூற முடியாத ஒன்று. அவர்கள் வாழும் இடம் நாளுக்கு நாள் மணிததியாலத்திற்கு மணித்தியாலம் சதித் திட்டத்தின் அங்கமாக நிறைவேற்றப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றத்திஞல் பறிக்கப்படுகிறது.

### குடியேற்றம்

கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதியாய் விளங்கும் அம்பாறை இன்று முழுச் சிங்கள மயமாகிவிட்டது மூதூரை இதோ முற்று கையிடுகிறோம் என்று சிங்களப்படை முனைந்து நிற்கின்றது. கல்முனையை கால் பங்கிற்குமேல் சிங்களக் குடியேற்றம் ஆட் கொண்டு விட்டது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கின் கிழக்கு மாகாணத்தின் முஸ்ரும் பிரதிநிதித்துவம் முதலிலே குறைக்கப்படும். முடிவில் முற்ருக நீக்கப்படும். அப்பொழுது அபூபக்கர் அப்புகாமியாக மாறுவார். பத்திமா பொடிநோனுவாக மாறுவார். இஸ்லாத்தின் இடத்திலே புத்த நெறி தலைதூக்கும். முஸ்லிம் சமுதாயம் தனிப்பண்பை மறக்கும். தன் மதத்தை துறக்கும். இவ்விழி நிலையை முஸ்லிம் சகோதரர்கள் வரவேற்கத் தயாரா?

### சலுகைகள் கிடைத்தால் போதுமா?

மருத்துவ விடுதிகள் (Hos Pitals அஞ்சல் நிலையஙகள (Post Offices) கல்வி நிலையங்கள் முஸ்லிம் மக்களுக்கு வேண்டும். மறுக்கவில்லை; ஆஞல் மேலே குறித்தவற்றின் பேரிலே பொருளாதார வளர்ச்சி என்ற பொய்ப் பேச்சிலே தாம் வழி வழி வாழும் மரபு வழித தாயகத்தை (Traditional Homeland) இழந்து யாருமே மதிக்காத அரசியல் அஞதைகளாக வாழ முஸ்லிம் சமுதாயம் விரும்புகிறதா? ஒவ்வொரு முஸ்லிம் மகனும் தன் இதயத்தைத் தொட்டு தன்னைத்தானே இக்கேள்வியைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

### முஸ்லிம் தனியரசு

முஸ்லிம் சமுதாயம் தமக்கென்று ஒரு அரசை கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையில் தாம் பெரும்பான்மையாக வதியும் பகுதியில்நிறுவி ஆளும் உரிமை பெறுவதை தமிழரசுக் கட்சி ஒன்றே வரவேற்கிறது—அற்தகான பிரசாரத்தையும் செய்து வருகிறது. 1956 ல் நிறைவேற்றப் பட்ட தமிழ் அரசுக் கட்சியின் திருமலைத் தீர்மானம் அழுத்தம் திருத்தமாய் இதைக் கூறுகிறது.

இன்று முஸ்லிம் மக்களின் தலைவர்கள் சிலர் முஸ்லிம் சமுதாயம் தனது தனிப் பண்பை (Individuality) அழியாது காப்பதற்கு "இஸ்லாமிஸ்தான்" வேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர். இது மகிழ்ச்சியோடு வரவேற்கத் தக்க குரல். ஆஞல் இந்தக் குரலை எழுப்புபவர்கள் உண்மையில் முஸ்லிம் மக்களின் நலனை உளத்தில் இருத்திக் கூறுகிருர்களா? அல்லது ஏதாவது கூறி தேர்தலில் வென்ருல் போதும் என்ற எண்ணத்தில் கூறுகிருர்களா? முஸ்லிம் மக்கள் நன்கு சிந்தித்து முடிவுகட்ட வேண்டிய விடயம் இது.

"இஸ்லாமிஸ்தான்" இணையாட்சி (Federal) அடிப்படையில் உருவாக்க முயலுவது நல்லமுயற்சி. ஆஞல் இஸ்லாமிஸ்தானை உருவாக்குவோம் என இடைக்கிடை குரல் எழுப்பும் சில முஸ்லிம் தலைவர்கள் தமது குடும்ப நலத்திற்காக முஸ்லிம் மக்கள் வதியும் இடங்களை சிங்களவர்கைப்பற்ற பக்கத்துணையாயும் தூண்டு கோலாயும் இருந்தவர்கள்— இருப்பவர்கள் என்பதை முஸ்லிம் மக்கள் நினைவில் வைத்தல் நலம். ஆகலால் எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் மக்களின் நலத்தின் பொருட்டு உள்ளும் புறமும் தூய்மையோடு பணியாற்றக் கூடிய பிரதிநிதிகளை அவர்கள் தெரிவு செய்யத் தவறக் கூடாது

### பாதுகாப்பு

இன்று முஸ்லிம் மக்களின் நிலையான வளமான வாழ்வின் பொருட்டு கிழக்கு மாகாணம் சிங்கள இனவெறியரால் அபகரிக்கப்படாது இயன்றளவு காப்பாற்றி வருவது தமிழ் அரசுக் கட்சி ஒன்றுதான் ஆதலால் அக்கட்சியின் வேட்பாளரையும் அக்கட்சியின் கொள்கைகளை பெருமளவு ஏற்று நிற்கும் வேட்பாளர்களையுமே முஸ்லிம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும்

இஸ்லாமிஸ்தானை இஸ்லாமிய மக்கள் நிறுவ விரும்பின் தமக்கென்று ஒரு தனியிடம் முதலில் அவர்களுக்கு வேண்டும் என்பதை உணர்தல் நலம். "சுவர் இருந்தாற்ருன் சித்திரம் வரையலாம்." இதையே பாகிஸ்தானை உருவாக்கிய ஜஞப் முகமதலி ஜின்ஞவும் அடிக்கடி வலியுறுத்திஞர்.

### தமிழரசார் அக்கறை

ஈழத்தின் முஸ்லிம் மக்கள் மீது மட்டுமின்றி உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் மீதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எவ்வளவு கவனம் செலுத்தி வருகிறதென்பது 3-12-47ல் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் அரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசிய பேச்சிலிருந்து ஓரளவு தெரிய வருகிறது. "தங்கள் துயர் படிந்த வாழ்விற்கும் தங்கள் சிக்கல்களுக்கும் (பிரச்சினைகளுக்கும்) ஓர் முடிவு காண முஸ்லிம் சமுதாயம் பாகிஸ்தானை உருவாக்க முயன்ருல் அதைத் தேசத் துரோகம் என்பதா?" என்று தந்தை கேட்டார் 'It can't be said that the muslims of India who stood for Pakistan were disloyal. They were finding a solution to their own grievances and to their own problems"

### கடமை

சுருங்கக் கூறின் அன்று தொட்டு இன்றுவரை முஸ்லிம் மக்களை தமிழ் பேசும் இனத்தின் பிரிக்க முடியாத அங்கமென மதித்து பணியாற்றி வரும் ஒரேஒரு அரசியல் கட்சி தமிழ் அரசுக் கட்சிதான். விடயங்களைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் திறன்படைத்த எந்த முஸ்லிம் பெருமகனும் இதை ஏற்றேயாக வேண்டும். ஆதலால் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் எமது முஸ்லிம் சகோதர்தரர்கள் தம் கடமையை சரிவரச் செய்யத் தவறக் கூடாது. அப்பொழுது தான் இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் வழித்தோன்றல்கள் "எமக்கு வாழ்வளித்த முன்ஞேர்கள்" என்று இன்றுள்ளவர்களை நாளை வாழ்த்துவர்; வழுத்துவர்.

—ஈழவேந்தன்

## "நாடறியச் செய்மகனே!"

—மட்டுநகர் முத்தழகு—

மதுரையில் பிறந்தவனே! மலைநாட்டில் தவழ்பவனே!
முத்தமிழே! முத்தே! முத்தவனே! என்மகனே!
நாதியற்ற நிலையினிலே நாயாக அலைபவனே!
நாடாண்ட மொழியினிலே நீயானத் துடிப்பவனே!

தாயானேன் நானுனக்குத் தேனோடு பாலடை
தாலாட்டித் தருவேன்கேள் தந்தையின் "மொழிப்பலியை"
தேயாத நிலவினிலே மீன்பாடும் இசையினிலே
தமிழ்மகனே! தவிர்நடையே! தமிழோடு நான் சொல்வேன்.

முன்னோர்கள் மூத்தமொழி முத்தமிழை வளர்த்தமொழி
மயானத் தலத்தினிலே! மண்மேடாய் உயர்வதைப்பார்.
வானோர்கள் போற்றிடவே வள்ளுவனார் வகுத்தகுறள்
வாயடைத்து நிற்பதைப்பார்! விழியிழந்து தவிப்பதைப்பார்!

பாரதியும் படைத்தகுயில் பாட்டெங்கும் கூவவில்லை!
பாலர்களாம் உங்களுக்கே பாடியதும் கிடைக்கவில்லை!
வீரநடைக் காவியத்தின் கலிங்கத்துப் பரணியையும்
விழுங்கியே ஏப்பமிடப் பாய்ந்துவரும் வேங்கையைப்பார்.

என்தந்தை சென்றவழி ஏடெல்லாம் புகழ்ந்தவழி
உன்தந்தை சென்றவழி ஊரெல்லாம் திரண்டவழி
என்மகனே!, நீயெழுந்து என்மொழியின் இனம்காத்து
நீயிறந்த காரணத்தை நாடறியச் செய்மகனே!

### விவேகானந்த சபையின் பணிகள்

கொழும்பு விவேகானந்த சபையில் மாணவ, மாணவிகளுக்குச் சைவசமயப் பாடம் இலவசமாகப் போதிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு திங்கள், புதன்கிழமைகளில் மாலை 5-00 மணிக்கும், மாணவிகளுக்கு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 2-30 மணிக்கும் சபை மண்டபத்தில் நடத்தப்படுகின்றன. பல மாணவ, மாணவிகள் இந்த வகுப்பில் சேர்ந்து படிக்கின்றனர்.

கலைத் துறையிலும் அபிவிருத்திசெய்யும் நோக்கத்துடன், நடனம், வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிற்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஈழத்தில் புகழ் பெற்ற கலைஞர்களான திருமதி கமலா ஜோன்பிள்ளை, செல்வி தர்மதேவி துரைசிங்கம் (நடனம்) திருமதி பகவதி இரங்கராசன் (வாய்ப்பாட்டு) திரு. வே. சங்கரலிங்கம் (வயலின்) திரு. த. இரத்தினம் (மிருதங்கம்) ஆகியோர் ஒவ்வொரு வகுப்புகளுக்கும் பொறுப்பாக இருந்து நடத்துகின்றனர். இந்த வகுப்புகளுக்கு மிகவும் குறைந்த கட்டணமே [illegible]


முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!



அதை ஒழியுங்கள்!

ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆஞல் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.

STB-BF/MA-T-S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கொழிக்கும் வன்னி நாட்டின் தீர்ப்பு என்ன?

## முன்னவர் சேவைகள் நம்மவர்க்கு உதவியதா?

## உரிமையியக்கத்துடன் ஒத்துழைக்க மக்கள் உறுதி பூண்டுள்ளார்கள்

ஈழத் திரு நாட்டின் திலகமாய் விளங்கும் வட மாகாணத்தின் எல்லைப் பிரதேசமான வவுனியா தொகுதியில் சில பல ஆண்டுகளாக திகழ்ந்த அரசியல் தலைவர்களின் சேவைகளையும் அவர்களின் காலங்களில் இத் தொகுதியில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் சிறிது ஆராயுமிடத்து நாம் எவ்வளவு கவனமுடன் இத்தேர்தலில் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற உண்மை புலனுகின்றது.

வவுனியா தொகுதியின் வாக்காளர்களில் ஒருவன் என்ற ரீதியில் எதிர் வரும் மார்ச் 22ல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் இத்தொகுதியில் போட்டியிடும் தலைவர்களைப் பற்றி நாம் சற்று ஆராய வேண்டும்.

### திரு. சுந்தரலிங்கம்

திரு. சுந்தரலிங்கத்தின் அரசியல் வாழ்க்கையைப் பற்றி அதிகம் எழுத வேண்டிய அவசியம் இல்லை. அவரது கடந்தகால அரசியல் வாழ்க்கைகளை நாம் சற்று சீர்தூக்கிப் பார்க்குமிடத்து-இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், அன்று ஆண்ட கட்சியான திரு. டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சரவையில் அங்கத்தவராக இருந்து விலகிய இப்பெரியாரின் பிந்திய அரசியல் வாழ்க்கைகள் மிக விசித்திரமாகவே இருந்தன.

இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களின் ஏகபோக பலத்தைப் பெற்றிருக்கும் தமிழரசுக்கட்சி இருக்க, அக்கட்சி மீது எக்காரணம் கொண்டோ திருவாளர் சுந்தரலிங்கம் அவர்கள் தேவையற்ற சந்தேகம் கொண்டு தனது தலைமையில் தனக்கென ஒரு கட்சியை நிறுவினுர். சென்ற சில ஆண்டுகட்கு முன்னர் அவரால் நிறுவப்பட்ட அவரது கட்சி தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் யாது என்பதை மட்டும் தான் நாம் இந்த நேரத்தில் கவனிக்க வேண்டும்.

வவுனியா நகரசபைத் தேர்தல்—மூதூர் இடைத் தேர்தல்—வவுனியாத் தொகுதியின் பொதுத் தேர்தல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இப்பகுதிப் பொது மக்கள் முன் திரு. சுந்தரலிங்கமோ அல்லது அவரது கட்சியோ தோன்றியிருக்கிறதா? பொது மக்களின் குறைகளை விசாரித்து ஏதாவது சேவை செய்தாரா திரு. சுந்தரலிங்கம்?

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது என்று இடை இடையே பத்திரிகைகளில் அறிக்கை விடும் திரு. சுந்தரலிங்கமும் அவரது கட்சியும் தமிழினத்தின் விடுதலைக்காக உருப்படியான திட்டம் வகுத்து சேவை செய்தார்கள் என்பதை இன்று வரை யாரும் அறியக் கூடியதாக இல்லை. எனவே நாம் கவனிக்குமிடத்து தேர்தலுக்குத்தேர்தல் தோன்றும் ஒரு தலைவரும் ஒரு கட்சியுமென்றே நாம் திரு. சுந்தரலிங்கம் பற்றி கூறவேண்டிய கட்டத்தில் இருக்கின்றேம். திரு. சுந்தரலிங்கத்தின் படிப்பு—பேச்சு வன்மை இது பற்றி நாம் எதையும் குறை கூறவில்லை. தமிழரசுக் கட்சி எதையும் சாதிக்கவில்லையே என்று ஓலமிடும் தலைவர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள்—தான் செய்த—வகுத்த திட்டங்கள் சேவைகளையாவது ஏன் வெளியிடக் கூடாது? காரணம், எதுவுமே இல்லை.

இன்றைய தமிழினம் வேண்டுவது வெறும் தேர்தல் ஏமாற்றல்ல, உண்மையான சேவை மனப்பான்மையுடைய சத்திய சீலர்களின் சேவையே.

### தமிழ்க் காங்கிரசின் திடீர்க் குடியேற்றம்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அரசியல் நிலை பற்றி நாம் சிந்திக்குமிடத்து, இக்கட்சி வன்னிநாட்டிற்கு இத்தேர்தலுக்காக குடியேறிய கட்சி என்றே கூறவேண்டும். இக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் முன்னை நாள் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் அவர்களின் சேவைக் காலத்தில் ஏற்பட்ட சில முக்கிய விடயங்களையும் கவனிப்போம்.

இன்றைய நிலையில் தமிழினத்தை எதிர் நோக்கியிருக்கும் மிக ஆபத்தான பிரச்சினை குடியேற்றத்திட்டமாகும். வவுனியாத் தொகுதியில் சிங்கள மக்களின் குடியேற்றம் பல நடைபெற்றிருக்கின்றன. குடி இருக்க ஒரு முழக்காணியில்லாத சில தமிழ் மக்கள், முடிக்குரிய காணியில் சில பகுதியைத் திருத்தி குடி ஏறினுல், அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுக்கின்றது. ஆனுல் பாவற்குளம், நேரியகுளம், ஈரப்பெரிய குளம் கொக்குவெளி, வாரிக்குட்டியூர். இப்படியான இன்னும் சில பகுதிகளில் எத்தனையோ சிங்கள மக்கள் அத்து மீறி குடியேறி இருக்கின்றார்கள். இது பற்றி திரு. சிவசிதம்பரம் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி ஏதாவது நடவடிக்கையை எடுத்திருந்தால் ... இல் நடைபெற்ற சிங்களக் குடியேற்றம் ... பட்டிருக்கும்.

### குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீடுகள்

வவுனியாத் தொகுதியில் உள்ள பல குடியேற்றத் திட்டங்களில் கட்டப்பட்டிருக்கும் சிறு வீடுகள்—வீதிகளைப் பற்றி குறிப்பிடால் முன்னுள் பிரதிநிதியின் நிலை விளங்கும். குறிப்பாகசெட்டிகுளம், முகத்தான் குளக் குடியேற்றம் ஆகியவற்றில் உள்ள வீடுகளைப் பற்றி நாம் எழுதுவதிலும் பார்க்க நேரில் பார்த்தால் கண்ணீர் விடவேண்டும். குடியேற்றத் திட்டத்திற்குச் செல்லும் வீதிகள் எல்லாம் மிக மோசமான நிலையில் உள்ளன.

வருடம் ஒன்றிற்கு அரசாங்கம் குடியேறியுள்ள மக்களிடம் வீடு ஒன்றிற்கு எழுபது ருபா வீதம் வரிவாங்குகிறது. அப்பணத்திலாவது அரசாங்கத்தைக் கொண்டு வீதிகளைத் திருத்தம் செய்து மக்களின் கஷ்டங்களைப் போக்கியிருக்கலாம் திரு. சிவசிதப்பரம்.

சென்ற தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. சிவசிதம்பரம் அவர்கள் சிங்கள மக்களின் ஆதரவையும் பெற்றிருந்தார். இம்முறை இத்தொகுதியில் மூன்று சிங்கள வேட்பாளர்கள் போட்டியிடுவதால்—அவர்களின் ஆதரவு கிடைக்காது என்ற எண்ணத்தால்— திரு. சிவசிதம்பரம், திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கிவரும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். எனவே இத்தேர்தலில் திரு. சிவசிதம்பரத்திலும் பார்க்க அவர் சேர்ந்துள்ள கட்சியையே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

நான் முன் கூறியது போல திரு. சுந்தரலிங்கத்தின் கட்சியும் திரு. சுந்தரலிங்கமும் தேர்தலுக்கு தேர்தல் தலை நீட்டுவது போல, தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அக் கட்சித் தலைவரும் தேர்தலுக்கு தேர்தல் தலை நீட்டுவதைத் தவிர இதுவரை தமிழினத்தின் விடுதலைக்காக என்ன சேவை செய்தார்கள் என்று யாராவது கேட்டு விட்டால்; மூச்சு......!

தமிழ் காங்கிரஸ் கட்சியும் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலமும் தேர்தற் காலம் தவிர மற்றும் நேரங்களில் ஏன் தமிழ் மக்கள் முன் தோன்றுவதில்லை என வியப்புடன் வினவுகிறுர்கள் வவுனியா வாழ் பொது மக்கள்.

இது தவிர வவுனியாத் தொகுதியில் இம்முறை போட்டியிடும் மூன்று சிங்களப் பிரமுகர்களும் ஒரு தமிழ்ப் பெரியாருமாகிய திரு. சத. சிறிநிவாசன் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டுக் கூறுவதற்கு எதுவுமில்லை; காரணம், இவர்கள் எந்த அரசியற் கட்சியையும் சாராத கொள்கையற்ற சுயேச்சை வாதிகளாவர்.

### நடிகவேள் பொன்னம்பலம்

நடிகவேள் எம். ஆர். ராதாவை நேரடியாகக் காணுதவர்கள் கடந்த 25-ம் திகதி மட்டக்களப்பில் பிரத்தியட்சமாகக் கண்டனர். 'இரத்தக் கண்ணீர்' சினிமாப் படத்தில் ராதா எவ்வாறு தோன்றி மேல் நாட்டுப் பாணியில் கோணங்கிப் பேச்சாளராக பேசினுரோ அதே மாதிரியே திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் மேடையில் தோன்றினுர்.

இடையிடையே திரு. பொன்னம்பலத்துக்கு தமிழ் தடுமாறியதனுல், மேடையிலிருந்தவர்கள் உதவினர். ஏதோ ஒரு கருத்தைக் கூறத் தலைப்பட்ட ஒரு காங்கிரஸ் அபேட்சகரை திரு. பொன்னம்பலம் 'வாயைப் பொத்திக்கொண்டு சும்மா இரும்' என்று ஆங்கிலத்தில் கடிந்துவிட்டார். வேட்பாளரின் சிவந்த முகம் கறுத்துவிட்டது.

### தமிழரசார்

தமிழ் பேசும் மக்களின் பெரும் பகுதியினரான மலை வாழ் தமிழ் பேசும் மக்களை அரசியலில் அனுதைகளாக்கிய ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைத்துக் கொண்டிருந்த தமிழ் காங்கிரஸ் கட்சியின் துரோகத்தனத்தை எதிர்த்து வெளியேறி தனி இயக்கம் கண்டனர் திரு. செல்வநாயகமும் அமரர் வன்னியசிங்கமும். அவர்கள் கண்ணீர் விட்டு வளர்த்த இயக்கமே இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும்மக்களின் விடுதலையொன்றையே தனது மூச்சாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. ஈழத்தில் சிதறிக் கிடந்த தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டிய பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரியது. சிங்கள ஏகாதிபத்தியத்தை செயலிழக்க வைத்த பெருமையும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உண்டு.

இத்தகைய பலம் பொருந்திய இயக்கத்தின் வேட்பாளராகப் போட்டியிடுகிறுர் திரு. வின்சென்ற் அவர்கள். கடந்த தேர்தலில் மிகக் குறைந்த வாக்குகளால் அவர் தோல்வியடைந்த போதும் மனம் சோராது ஒரு போராட்ட வீரனுக நின்று தமிழ் உரிமைப் போராட்டங்களை நடாத்தியுள்ளார். தமிழினத்தின் விடுதலைக்காக எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளிலும் அவர் கலந்துள்ளார். மாற்றுடையாரைப் போன்று தோல்வியடைந்தும் முக்காடு போட்டு மூலையிற் குந்தவில்லை திரு. வின்சென்ற். சக்திவாய்ந்த விடுதலை இயக்கத்தின் பிரதிநிதி தான் என்பதை அவர் பல தடவைகளில் நிரூபித்துள்ளார்.

இம்முறை வன்னி நாட்டு மக்கள் தமிழரசுக் கட்சி வேட்பாளரான திரு வின்சென்ற் அவர்களை எமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து தமிழினத்தின் விடுதலைக்காக பாராளுமன்றத்தில் உரிமைக் குரல் எழுப்ப அனுப்பி வைக்க நிச்சயம் தவறமாட்டார்கள். பொங்கியெழுந்துள்ள மக்கள் ஆதரவு இந்த உண்மையைப் பறையறைகின்றது.


இப்பொழுது இத்தீவு அடங்கலுக்குமான பூரண தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது!

வாங்குங்கள்

'ஹன்ஸாயா'
(அன்னம்)
ஜி. ஐ. வாளிகளை

(இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவது)

* நம்பிக்கை வாய்ந்தது
* சிக்கனமானது
* விருப்பமான எல்லா அளவுகளிலும் கிடைப்பது.

பிரதிநிதித்துவம் வகிக்கப்படாத பகுதிகளில் ஏஜெண்டுகள் தேவை.

செண்ற். அந்தனீஸ் இண்டஸ்ட்ரீஸ்,
752, பேஸ்லைன் ரோடு,
கொழும்பு-9.

டெலிபோன் : 5537



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தங்களைக் குறைக்கிறார் சரோஜாதேவி

## ஓய்வு தேடுவதற்கு நடவடிக்கை

படங்களில் நடிப்பதை சரோஜாதேவி குறைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார். கையிலுள்ள ஒப்பந்தங்கள் யாவும் முடியும் வரை புதிய ஒப்பந்தங்கள் எதிலும் கையெழுத்திடுவதில்லை என்று சரோஜாதேவி கூறினார்.

ஓய்வு ஒழிச்சலின்றி சரோஜாதேவி திரைப்படங்களில் நடித்து வருவதனால் போதிய



ஓய்வு கிடைப்பதில்லையாம். நேரத்துக்குத் தூக்கமோ, உணவு கொள்ளவோ முடியாதிருப்பதனால், உடம்புக்கு ஓரளவு ஓய்வு தேவைப்படுவதாகவும், இந்த ஓய்வினை திரைப்பட ஒப்பந்தங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமே பெறலாம் என்றும் சரோஜா தேவி கருதுகிறார்.

கடந்த 7-1-65ல் சரோஜா தேவி பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார். அன்றிலிருந்தே மேற்படி சக்கற்பத்தையும் அவர் பூண்டிருக்கிறார்.

'இதுவரை ஒப்பந்தமான படங்களில் லட்ச லட்சமாக பணத்தை முடக்கிய முதலாளிகளுக்கு ஒத்தாசை புரியவே இரவு பகலென்று பாராமல் ஓய்வின்றி படப்பிடிப்புகளில் கலந்து வந்தேன். தொடர்ந்து அப்படி வேலை செய்வது கடினமாக விருப்பதனால் இனிமேலாவது உடல் நிலையைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இனிமேல் என்ன காரணத்தை முன்னிட்டும் இரவு வேளைகளில் படப்பிடிப்பில் கலந்துகொள்ள மாட்டேன்', என்று சரோஜா தேவி கூறினார்.




## 'கோரு' (பனித்திரை)

(ஹிந்தி)

இளமையும் அழகும் பொருள் வளமும் நிறைந்த அமீத்தின் இரண்டாவது தாரமாக ராஜஸ்ரீ மாளிகையுள் நுழைகிறாள். மணமகனின் தாய் என்று தப்பாக எண்ணி மாளிகையின் தலைமை வேலைக்காரியின் கால்களில் விழுந்தெழுகிறாள். அது முதல் அந்த வீட்டில் அவள் கண்டது வெறும் ஏமாற்றமே!



படாடோப வாழ்வில் மயங்கி மதுவைச் சரணடைந்து மாற்றானின் மடியில் புரண்டவளான அமீத்தின் முதல் மனைவி பூனம், கொலை செய்யப்பட்டிருந்தாளானாலும், அவளுடைய ஆவி நடமாட்டம் அம் மாளிகையின் ஒவ்வொரு அங்கத்திலும், ஏன் ஆட்களிலுமே தென்பட்டது. ராஜஸ்ரீயை தலைமை வேலைக்காரமாதின் நடமாட்டமே மென்மேலும் வருத்துகிறது ஏனெனில், அவள் இறந்த பூனத்தின் அன்பிற்குப் பாத்திரமானவள்.

பூனத்தைக் கொலை செய்தது யார் என்ற மர்மம் தான் கதையின் உயிர்நாடி. பூனத்துக்குப் போதையூட்டி, அவளை தன்னடிப் படுத்திய காமுகனா? பைத்தியமாய் அலைந்த ஒரு பார்வையாளனா? அல்லது அவளுடைய நடத்தையில் வெறுப்புக்கொண்ட அவளுடைய கணவனா? இறுதியில் கணவனே குற்றவாளிக் கூண்டில் நிற்கிறான்.

விசாரணை முடிவில் அமீத் விடுதலை அடைகிறான். ராஜஸ்ரீயுடன் புது வாழ்வு தொடங்குகிறான். இருவரின் இன்ப வாழ்வுக்கும் இடையூறாகக் கருதப்பட்ட தலைமை வேலைக்காரிதான் ராஜஸ்ரீயின் தெய்வமாகிறாள்.

இந்தக் கதையை கீதாஞ்சலி பிக்சர்ஸ் உயர்ந்த திரைச் சித்திரமாக்கி பார்ப்போரைப் பரவசப்படுத்துகின்றனர். இந்தி பேசும் சித்திரமானாலும் இப்படம் தயாரிக்கப்பட்டுள்ள முறையும், உயர்ந்த படப்பிடிப்புகளும் சுவையினை ஊட்டுகின்றன.

இப்படத்தில் வஹிதா ரஹ்மான், பிஸ்வஜீத், லலிதா பவார் முதலியோர் முக்கிய பாத்திரங்களில் வருகின்றனர்.

பலரும் விரும்பிப் பார்க்கக் கூடிய சிறப்பு அம்சங்கள் கொண்ட உன்னத சித்திரம் கோரு.

—நாதன்.

## நடக்கவிருப்பவை

### யாருக்காக அழுதான்

தமிழர் முன்னேற்றக் கலை மன்றத்தின் வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 7-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'நடிகவேள் குழுவினர்' தமது பிரசித்தி பெற்ற நாடகமான 'யாருக்காக அழுதான்?' நாடகத்தை மீண்டும் மேடையேற்றுகிறார்கள்.

'மனிதருபம் கொண்டவர்கள் எல்லோரும் மனிதர்கள் அல்ல' என்பதை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட இந்நாடகத்தில் லடீஸ் வீரமணி ஏ. எஸ். ராஜா, மணிவண்ணன், எம். எம். ஏ. லத்தீப், எஸ். காளிதாஸ், எம். கௌதமன், கே. வி. சாமி, ஏ. நல்லு, ஓஹா தாஹிர் ஆகியவர்களோடு சிவா ஸ்ரீமணி, ஸ்டீபன், வெற்றிமணி, செல்வன் ராதாமணி, குமாரிகள் சந்ரகலா, ராஜமணி ஆகியோர்கள் நடிக்கிறார்கள். காட்சி அமைப்பை விக்டர்-கலைமணி கவனிக்கிறார்கள்.

### 'முல்லைத்தீவு'

'வஞ்சகத்தால் வளர நினைப்பவர்கள் வஞ்சகத்தாலேயே அழிவார்கள்', என்ற தத்துவத்தை விளக்கும் கற்பனைச் சித்திரமான 'முல்லைத்தீவு' சரித்திர நாடகம் 13-ந் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்படவிருக்கிறது.

வீரமோகன், சித்திரகலா, டீன் கணேஷ், சூரியகுமாரி, மோகன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

டீ. ஆப்தீன் இந்நாடகத்திற்கு கதை, வசனம், பாடல் எழுத, பி. எஸ். ராஜன் டைரக்ட் செய்கிறார்.

### யாருக்குச் சொந்தம்

யாழ். ஞானம் புரொடக்ஷன்ஸ் தங்களின் 'யாருக்குச் சொந்தம்' என்ற நாடகத்தை ஏப்ரல் முதல் வாரத்தில் மேடையேற்றவுள்ளனர். இந்நாடகத்தின் கதை வசனத்தை ஆர். எம். ராசு எழுதுகிறார்.

### 'குண்டலகேசி'

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான 'குண்டலகேசி' நாடகத்தை திரு. வி. என். பெரியசாமி தயாரித்து வருகிறார். கதை வசனத்தை எழுதி டைரக்ட் செய்யும் பொறுப்பினையும் திரு. பெரியசாமியே ஏற்றுள்ளார். ஏப்ரல் மாதம் இந்நாடகம் மேடை யேற்றப்படவிருக்கிறது.



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் இரு வேடங்களில் தோன்றி வீரச் சாகசங்கள் புரியும் கிருஷ்ணா பிக்சர்சின் 'ராஜா தேசிங்கு' சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது. இப்படத்தை இங்கு திரையிடக் கூடாதென தடையுத்தரவு போடப்பட்டிருந்தது தடை நீங்கி இப்படம் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது.

## காங்கிரஸ் கூட்டத்தில்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைக்கு பதில் தர முடியாமல் பதுங்கியிருந்த திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் பொலிசார் என்னைப் பிடித்து விட்டார்கள் என்பதை நன்கு தெரிந்த பின்னர் கூட்டத்தின் முடிவில் காசி. ஆனந்தன் எங்கே அவர் மேடைக்கு வரலாம்' என்று மிகவும் தைரியமாக என்னை மேடைக்கு அழைத்தாராம் என்ற நகைப்புக்குரிய செய்தியை பொலிசிலிருந்து விடுதலையாகிய பின்புதான் நான் அறிந்தேன்.

அடுத்த நாள் காலையிலேயே 'திரு. பொன்னம்பலம் அவர்களே நான் பொலிசில் இருக்கின்ற சமயம் பார்த்து என்னை மேடைக்கு அழைத்த உங்கள் வீரத்தை நான் மெச்சுகிறேன். இப்பொழுது நான் பொலிசிலிருந்து வெளியில் வந்து விட்டேன். நீங்களும் இன்னும் ஊருக்குப் போய் விடவில்லை. இராசதுரை அவர்களை சவாலுக்கு அழைப்பதற்கு முன்பு அவருடைய மாணவனாகிய என்னை உங்களால் வாதில் வெல்ல முடிகிறதா பார்ப்போம். ஏனய்யா இன்று பேசுவோமா நாளை பேசுவோமா' என்று ஒரு பகிரங்க சவாலை ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு மட்டக்களப்பின் எல்லா இடங்களிலும் நான் விநியோகம் செய்தேன். திரு பொன்னம்பலத்துக்கும் அவருடைய சகாக்களுக்கும் பிரசுரங்கள் கிடைத்தன அதன் பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் ஒரு வார்த்தை கூட இதனை பற்றிக் கூறவோ என்னை மேடைக்கு அழைக்கவோ இந்தத் தலைவர்கள் தயங்கிவிட்டனர்.

இல்லாத பொய்களைச் சொல்லி அரசியல் நடத்தும் காங்கிரஸ் காரர்கள் மட்டக்களப்பு மேடையில் ஆடிய ஆட்டமும், மட்டக்களப்பை விட்டு ஓடிய ஓட்டமும் அவர்களுடைய கையாலாகாத்தனத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மட்டக்களப்பு மக்கள் திரு. பொன்னம்பலத்தின் திருகுதாளங்களை அறிந்து கொள்ள ஒரு மகத்தான வாய்ப்பைப் பெற்றார்கள். நான் கைதான நிகழ்ச்சி காங்கிரஸ் காரரின் குட்டை வெளிப்படுத்த பெரிதும் துணை புரிந்தது என்ற வகையில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.



சிலோன் என்டர்பிரைஸஸ் ... திரைகளில் இரசிகர்களுக்குக் காட்சி கொடுக்கும் 'ஆயிரம் ரூபாய்' படத்தில் ஜெமினி கணேசன் ... தோன்றும் ஒரு காட்சி.

நடந்தவை
நடக்கவிருப்பவை
கலைப்பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி விழாக்கோலம் பூணுகிறது

## மன்னாரின் மன்னர் வி. அ. அழகக்கோன்



மன்னார் மாவட்டம் மாபெரும் நிலப் பரப்பை உடைய பிரதேசம். இப்பகுதியிலே இந்துக்களும் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து வாழ்கின்றனர். வளம் குன்றிய இப்பிரதேசத்தை வளமாக்க, தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கான வேலைகளைத் தாங்களே முடிக்க வல்ல உரிமை பெற்றாலன்றி வேறு எந்த ஒரு தனிச் சிங்கள அரசும் உதவி புரியப் போவதில்லை

இந்த உண்மையினை உணர்ந்த மூதறிஞர் திரு வி. அ. அழகக்கோன் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கென சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் பொருட்டு அமைக்கப்பட்ட தமிழரசுக்கட்சியில் சேர்ந்து உழைக்கலானார். எந்த இலட்சியங்களை அடைய தமிழரசுக்கட்சி தோன்றியதோ அதே இலட்சியங்களுக்காகப் போராடும் கடமை வீரர்களுள் ஒருவராக திரு. அழககோன் இன்றும் திகழ்கிறார்.

நோய் உடலை வருத்தினாலும்கொண்ட கொள்கைக்காக, களம் நோக்கிப் பாய்ந்து இளம் காளையரைப் போல் அறப் போராட்டங்களில் திரு. அழகக்கோன் கலந்து கொள்ளுவார். தமிழரசுக் கட்சி நடாத்திய அறப் போராட்டங்களில் அயராது பாடுபட்டு அதனால் இருமுறை காவலில் தலைவர்களுடன் வைக்கப்பட்டிருந்தார். வீட்டுக் காவலிலிருக்கும் போது ஆட்சியுடன் அவர் நடாத்திய போர் அளவிட முடியாதது.

பண்டைப் பெருமை வாய்ந்த மாதோட்டமும் மன்னாரும் இயற்கை அன்னையின் சீற்றத்துக்கு இலக்காகி, கோரப் புயலில் சிக்கிய போது திரு. அழகக்கோன் மக்களுக்காற்றிய சேவை மகத்தானது.

விவசாயத்துறையிலும், மீன் பிடித்துறையிலும் வளம் சிறந்த மன்னார் நன்னாட்டை முன்னேற்ற திரு. அழகக்கோன் அரும்பாடுபட்டு வருபவர். கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தின் மேன்மைக்காக அவர் ஆற்றிய தொண்டுகளை மன்னார் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

வழக்கறிஞரான திரு. அழகக்கோன் குழந்தை உள்ளம் படைத்தவர் எவருக்கும் எந்த வகையான பாகுபாடுமின்றிச் சேவை புரியும் மனப்பாங்குடையவர். மன்னார் மக்கள் இவர் பால் கொண்டுள்ள பெருமதிப்பின் பயனாக இவர் என்றென்றும் மன்னாரின் மாமன்னராகவே இருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

---

சாவகச்சேரி—நெஞ்சத்து நினைவிலும் பஞ்சத்துக் கனவிலும் என்றும் தங்கியிருக்கும். எண்ணத் தெவிட்டாத வண்ண மலர்ச் சோலையாய், ஆனால் பகைக் குலத்தை இடிபோற் பின்னிப் புடைக்கும் விழாக் கோலம் பூணுகிறது.

நாடும் ஏடும் போற்றத் தக்க ஊக்கமும், உத்வேகமும், உற்சாகமும் ஊடுருவி விட்டது.

ஊரெங்கும் உணர்ச்சியும், உணர்ச்சியால் எழுந்த எழுச்சியும், எழுச்சியால மலர்ந்த மலர்ச்சியும் தாண்டவமாடுகின்றது.

### எதிர் முகாமின் கருத்து

சாவகச்சேரியின் பிரதிநிதியாகக் கடந்த பத்து ஆண்டுகளாகக் கடமை யாற்றி வந்த பைந்தமிழ்ச் செம்மல் திரு .வ: ந. நவரத்தினம் வாகைமாலை சூடி வெற்றி வேந்தனாக நான்காவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப் படுவார் என்ற செய்தி —குறிப்பாக எதிரிகளின்வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது.

சாவகச்சேரித் தரணியின் தார்வேந்தனாக இம்முறையும் வருவதற்கு—அதனை நிதானிப்பதற்குக் கடந்த கால அட்டவணையைச்சிறிது திருப்பிப் பார்த்தால் மூர்க்கனும் கூறுவான் மூவேழாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று திரு. நவரத்திம் வெற்றி பெறுவார் என்பதை.

ஏழாயிரத்து இருநூற்றெழுபத்தைந்து மேலதிகமான வாக்குகளை 1956ல் பெற்ற திரு நவரத்தினம், 1960 யூலையில் 12 389 வாக்குகளை அதிகப்படியாகப் பெற்றாரென்றால்—இம்முறை ஏறத்தாழ 18,000 ஒட்டுக்கள் மிகுதியாகக் கிடைக்கும் என்று சுலபமாகக் கூறிவிடலாம்.

1960ல் வாக்காளர் தொகை 25,822; ஆனால் இம்மறையோ (1965) 30,452.

1960ல் இருந்ததைவிட 1965ல் 4,630 வாக்குகள் அதிகமாக உள்ளன. அத்தனையும் துள்ளும் பள்ளிப் பருவத்தை விட்டு நீங்கி வாழ்வியலில் அடியெடுக்கவிருக்கும் தானைத் தளபதியாக விளங்கும் காளையரினதும்—சேனைத் தலைவர்களையும் வழி நடத்த வல்ல கன்னியரினதும்.

### இளையவர் ஆதரவு

விழுப்புண் படாத நாட்களை எல்லாம் வீண் நாட்களாகக் கருதிய மறக் ல இளையவர்கள் யாருக்கு ஒட்டளிப்பார்கள்? மொழியே நாட்டின் விழி என்று கூறும் தமிழரசுக் கட்சிக்குத் தான் நிச்சயம் அளிப்பார்கள்.

கண்டித்து அறப்போரும், சத்தியாக்கிரகமும், கண்டனங்களும், கறுப்புக் கொடிகளும் என்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளை நிகழ்த்தி—அரசினரின் கோபத்திற்குள்ளாகி தடியடியும்,கண்ணீர்ப் புகையும்—வெஞ்சிறையும் பெற்றதால் நாட்டு மக்களிடையே பெற்ற அனுதாபத்தாலும்—இந்த ஐந்தாண்டுகளில் திரு. நவரத்தினம் பெற்ற செல்வாக்கால் 5,000க்கு மதிகமான வாக்குகளும்—மற்றும் இளையவர்களின் 4,630 தையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது 22 000 அதிகப்படி வாக்குகளால் திரு. நவரத்தினம் வெற்றி வேந்தனா

## திருமதி ஏ. பி. செல்லையா

ஆதலால்—முறுக்கேறிய நரம்புகளில் ஓடும் சூடேறிய இரத்தத்தைக் கொண்ட இளையவர்களின் 4,630 வாக்குக்களும் திரு. நவரத்தினத்திற்கு உறுதி.

புள்ளி விபரங்களைப்பார்க்கும் பொழுது நமக்குப் புரிகிறது. 1956ல் 7,275 அதிகப்படி வாக்குகளைப் பெற்ற திரு. நவரத்தினம் 1960 யூலையில் 12 389 மேலதிகமாகப்பெற்றாரென்றால் மக்களின் ஆதரவு ஓங்குகிறது என்று தானே பொருள்!

1960 மார்ச்சில் தமிழ்க் காங்கிரசுக்கு 6,930 வாக்குகளும், 1960 யூலையில் 2 410 பெற்றது என்றால்—அதாவது மூன்றே மாதங்களில் 4,520 குறையுமென்றால்...! 1965ல் ...?சொல்லவே வேண்டாம்.

### 2?,000

1960 யூலையில் அதிகமாகப் பெற்ற 12,389 வாக்குகளுடன் கட்சியின் பிடிப்பாலும், தமிழை இலங்கையிலிருந்து ஒழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டும் காட்டு மிருக நோக்கங் கொண்ட சிங்களவரின் அடக்கு முறையும், எதேச் சாதிகாரப் போக்கையும் கப் பவனி வரப்போகிறார் என்பது வெள்ளிடைமலை.

யார் எது கேட்டாலும் நேரங் காலம் பாராதுதனது சுக துக்கங்களை நோக்காது—அதனால் வரும், இன்னல் இடைஞ்சல், துன்பந் துயர் எண்ணாது முடிந்த வரை பாடுபடும் பாட்டாளி திரு. நவரந்தினம்.

### விழாக் கோலம்

1965 மார்ச் 23ம் நாள் 22 000 வாக்குகளால் வாகை சூடி வெற்றி வேந்தனாக சுற்றுலா வரும் காட்சியைச் சிறப்பிக்கச் சாவகச்சேரி இப்பொழுதே எழுச்சி பெற்று விழாவிற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

---

# கொள்கை வீரரிடம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு வாக்களித்தனர். ஆனால் மக்கள் அளித்த வாக்குகளின் மகத்துவத்தை உணராமல் கட்சி மாறினார். பலனை 1960ம் ஆண்டு யூலை தேர்தலில் அனுபவித்தார். அப்போது தமிழரசுக் கட்சி வேட்பாளராகத் தோன்றியவரும் ஜனாப் காரியப்பரின் மருமகனுமான ஜனாப் எம்.,சி. அகமதுவினால் தோற்கடிக்கப்பட்டார்.

ஜனாப் அகமது அவர்களும் தாம் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு ஒப்ப நடக்கவில்லை தமக்கு வெற்றியீட்டிக் கொடுத்த தமிழரசுக் கட்சியைப்புறக் கணித்தார். இன்று ஜனாப் காரியப்பரும் ஜனாப் அகமதுவும் சேருவதற்கு ஒரு கட்சியும் இல்லாமையினாலும், எக்கட்சியும் இவர்களை ஏற்கப் போவதில்லை என்பதனாலும் சுயேச்சையாளர்களாகப் போட்டியிட முன்வந்துள்ளனர்.

### மௌலானாவின் தகைமை

தமிழரசுக் கட்சி தோன்றிய காலத்திலேயே கட்சியுடன் சேர்ந்து,அன்று முதல் இன்று வரை கட்சித்தொண்டனாகவே வாழ்ந்து வரும் ஜனாப் மசூர் மௌலானாவுடன். கட்சி விட்டுக் கட்சி மாறியதனால் மக்களிடம் செல்வாக்கிழந்துவிட்ட கொள்கையற்றவர்கள் பொருத முன் வந்துள்ளனர்

தன்மானத்தை விலை கூறாத, தமிழன்னையை விற்க முனையாத கல்முனைத் தொகுதி தமிழ் பேசும் மக்கள் எவ்வகையான தீர்ப்பினை வழங்குவர் என்பதனை அறிந்த சில கயவர்கள், கயமைத் தனத்தையும் காடைத்தனத்தையும் கட்டவிழ்த்து விடுவதால் விளைவுகள் தங்களையே விபரீதத்துக்குள் வீழ்த்துமே என்பதனை ஏனோ உணர மறுக்கின்றனர். கல்முனை மக்களின் தீர்ப்பு மட்டும் என்றும் மாறிவிடப்போவதில்லை.

ஜனாப் மசூர் மௌலா[illegible] வெற்றி பெற்று [illegible] துவிட்ட.

---

# மட்டக்களப்பு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் தலைவர் தந்தை செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திரு வி. நவரத்தினம், திரு. செ. இராசதுரை, செனட்டர் மூ. மாணிக்கம், திரு. சி. மூ இராசமாணிக்கம், திரு. பொ. மாணிக்கவாசகர், ஜனாப் மசூர் மௌலானா, ஜனாப் எம். எஸ் காதர் திரு. சாம் தம்பிமுத்து, திரு. ஆ. தவராசா, ஆகியோருட்பட வேறு பல பேச்சாளர்களும் பங்கு கொண்டு சொற்பொழி வாற்றினர்.

### மாமாங்கக் கூட்டம்

மாலையில் கோட்டைக்கல்லாற்றிலும், பெரிய கல்லாற்றிலும் நடைபெற்ற கூட்டங்கள் மட்டக்களப்பு மாமாங்கத் தீர்த்தோற்சவத்தை நினைவூட்டியது பெரிய கல்லாற்றின் சரித்திரத்திலே இத்தகைய சன சமுத்திரம் என்றுமே திரண்டதில்லை எனலாம். அன்றிரவு மருதமுனையில் தலைவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அடுத்த நாள் துறைநீலாவணை, சேனைக் குடியிருப்பு, பாண்டிருப்பு, கல்முனை, நற்பிட்டிமுனை ஆகிய ஊர்களிலும் மாபெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த வீரமுனை, தம்பிலுவில் ஆகிய கிராமங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன தம்பிலுவிலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு திரு. ஆர். டபிள்யூ வீ. அரியநாயகம் தலைமை தாங்கினார்.

திங்கட்கிழமை தலைவர்கள் கல்குடாத் தொகுதியில் தங்கள் பிரசார வேலைகளை ஆரம்பித்தனர்.

---

## கர்மவீரன் வி. என். நவரத்தினம்



பச்சிளம் பாலகரானாலும் சரி; பருவம் கடந்த முதியவரானாலும் சரி எல்லோரையும் எப்பொழுதும் சரிசமனாகவே கருதி களங்கமின்றி அனைவருடனும் கலத்துரையாடி மகிழும் குணசீலன் திரு. வி. என். நவரத்தினம்.

தமிழரசுக் கட்சி தயார் செய்த வீரஇளைஞர்களின் பட்டியலில் முன்னோடிகளுள் ஒருவராகத் திகழும் திரு நவரத்தினம் வீர உணர்ச்சியின் இருப்பிடமானவர். தமிழ் பேசும் மக்கள் தன்னிகரில்லாத சிறப்புக்கள் யாவும் பெற்றுத் திகழ வேண்டும் என்று சதா கனவு கண்டு கொண்டிருப்பவர். தனக்கென ஒரு தேசமின்றி தவித்து, இன்று வளம் சிறக்க வாழும் யூத இனத்தின் அடிச்சுவட்டில் தமிழ் பேசும் மக்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்ற துடிப்புடன் பணி புரிவர்.

இளம் நியாயதுரந்தரரான திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியின் போராட்டங்களில் தாவி முன்னோடும் இளம் காளை. தமிழன்னையை அரியணை ஏற்ற எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயார் எனச் சவால் விட்டு அறப்போர் புரிபவர்.

தம்மை அண்டியவர் எவராயினும் அவருக்கு அரும் பணியாற்ற அவாக் கொண்டிருப்பார்.எளிமையான தோற்றம் கொண்டவரான இவர்,தொண்டருக்கும் தொண்டு செய்யும் தகைமையாளர் எதிரியையும் தனது களங்கமற்ற அன்பால் கவரும் கர்மவீரர்.

1958ம் ஆண்டிலே ஆட்சியினரின் விருந்தாளியாக தலைவர்களுடன் சிறை புகுந்த நாள் முதல் இன்று வரை தமது முகமுடியினை சவரம் செய்யாதிருக்கிறார். தமிழன்னைக்கு இந்நாட்டில் சரியாசனம் கிடைக்கும்வரை முக சவரம் செய்வதில்லையென விரதம் பூண்டுள்ளார்.

சர்வகலாசாலையில் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த வேளையில் தமிழ்ச் சங்கங்களைத் தோற்றுவித்து தாய்த் தமிழின் மேன்மைக்காக உழைத்தார். தமிழகத்தில் பிரயாணம் செய்த வேளையில் தி. மு. க. தலைவர்களுடனும், வேறு அரசியற் கட்சித் தலைவர்களுடனும் ஒரே மேடையில் தோன்றி இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை விளக்கியிருக்கிறார்.

நான்காவது முறை சாவகச்சேரியில் தமிழரசு வேட்பாளராகத் தோற்றும் இவருக்கு இதுவரை கிடைத்த அதிகப்படி வாக்குகளைவிட இம்முறை தேர்தலில் மேலதிகமாக வாக்குகள் கிடைக்கும் என்று சாவகச்சேரி மக்கள் களி கொள்ளுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கள் தளபதி

ஈஸ்வரி, மூளாய்.

எனது தொகுதி வட்டுக்கோட்டை: கட்சிகளின் சார்பிலும் சுயேச்சையாகவும் பலர் எம்முன்வந்து வேட்பாளர்களாக நிற்கின்றனர். ஒவ்வொருவராக நாம் நோக்குகின்றோம். சிலரின் நிலை......அந்தோ பரிதாபம். அதைப் புகன்றிடல் பெரும் பாவம். அரசியலின் அரிச்சுவடியே என்னவென்று அறியாதவர்கள் அவர்கள். நம் வேட்பாளர்களின் அடிப்படைக் கொள்கைகளை அலசி ஆராய்ந்த நான், இவர்களை இருபிரிவினராகப் பிரித்தேன். ஒரு பக்கத்தில் ஒரே ஒருவர்; அவரது கொள்கை நம் இனத்தின் விடுதலைக்காகப் போராடித் தமிழன் தலை நிமிர்ந்து வாழவைப்பது. மற்றவர்களது கொள்கை இந்த ஒருவரை எதிர்ப்பது.

அந்த எதிர்ப்பிற்கு ஆளாகியிருக்கும் ஒருவர் வேறு யாருமல்ல. நம் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தான். நம் வேட்பாளரைக் குறித்து அதிகம் கூறவேண்டிய அவசியமில்லை. அவரை அறியாதவர் எவருமில்லையென்று கூறலாம். அன்பு, பண்பு, அடக்கம், பொறுமை, தியாகம், வீரம், திறமை, எளிமை இத்தனையும் நிரம்பியவர் தான் நமது பாராளுமன்ற உறுப்பினர் என்பது என்றோ தீர்மானிக்கப்பட்ட விடயம்.

தமிழுக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் தயங்காத ஓர் ஒப்பற்ற தலைவன். நம் தலைவனது அன்புருவம் நம் மனக்கண்முன் தோன்றும் போது உடனே அவரது மனைவியாராகிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களது உருவமும் கண்முன் நிற்கின்றது. கணவனுடன் சேர்ந்து தமிழுரிமைக்காகப் போராடித் தம்பெயருக்கேற்ப மங்கையர்களுக்கெல்லம் அரசியாகத் திகழ்கிறார் அவர்.

தமிழினத்தின் எதிர்கால நல்வாழ்விற்காகப் போராடும் இவர்கள் நம்தொகுதியிலிருப்பவர்கள் மட்டுமல்ல; அவர்கள் எனது ஊரிலேயே வாழ்பவர்கள் என்று கூறுவதில் நான் பெருமையும் மகிழ்வுமடைகின்றேன்.

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(37)

—அன்ரனி பெர்னண்டோ, கிரிலப்பனை—

## ஊசி போட்டுக் கொள்ளப் பயம் இனி ஏன்

நோய் வாய்ப்பட்டவர்களுக்கு வைத்தியர் ஊசி மூலம் மருந்தை ஏற்றிக் குணமாக்குகிறார். தேகத்தில் மருந்தை ஏற்றுவதற்கு ஊசியால் சதையில் குத்தும் போது எவ்வளவு வலிக்கிறது? ஒரே ஒரு ஊசி போடும் போது இப்படி வலித்தால் அடுத்தடுத்துப் பல ஊசிகளை அதே இடத்தில் போட்டுக்கொள்ள நேரிடும்போது எப்படியிருக்கும்? உயிர் போவது போன்ற உணர்வு கூடப் பலருககு ஏற்படும் அல்லவா?

ஒன்றுக்கு மேற்பட்ட ஊசிகளை அடுத்தடுத்து ஒரே இடத்தில போட்டுக் கொள்பவர்கட்கு அதிக வலி உண்டாகாமல் இருப்பதற்கு இப்போது ஒரு புதிய கருவி பாவிக்கப்படுகிறது. 'பிரானியூலா' என்று அழைக்கப்படும் இக்கருவியை மேற்கு செர்மனியைச் சேர்ந்த பி. பிரான் மெல்சன்சன் நிறுவனம் தயாரிக்கிறது.

இந்த நவீன கருவியில் நீண்ட மெல்லிய 'பிளாஸ்டிக்' உறையொன்று ஊசியை ஒட்டி மூடிக் கொண்டு இருக்கிறது ஊசியின் மூனை மட்டும் உறைக்கு வெளியே நீண்டிருக்கும். இதைச் சதையில் குத்தி நரம்பினுள் விடும்போது உறையும் எளிதாக உள்ளே செல்கிறது.

உறையின் அடிப்பாகம் சற்றுப் பெரிதாக இருப்பதோடு விரலால் தள்ளவோ இழுக்கவோ கூடிய ஒரு பிடியும் அவ்விடத்தில் இருக்கிறது. இந்தப் பிடியை விரலால் தள்ளுவதன் மூலம் உறையை நரம்பினுள் மென்மேலும் செலுத்தி வைத்துவிட்டு ஊசியை மட்டும் வெளியே இழுத்து எடுக்கலாம்.

இந்தக் கருவியால் முதல் முறை ஊசியை ஏற்றும் போது மட்டும்தான் வலி உண்டாகும். மறுமுறை சதையைத் துளைத்து வலி உண்டாக்காமல் ஊசியை உறையினுள் விட்டு மருந்தை ஏற்றமுடியும். இவ்வாறாக அடுத்தடுத்துப் பலதடவைகள் மருந்து ஏற்றினாலும் வலி உண்டாவது இல்லை. அது மட்டுமன்றி இந்த உறையினுள் ஊசியை விட்டு நோயாளிக்கு இரத்தம் செலுத்தவும் முடியும். இரத்தத்தை வெளியே எடுக்கவும் முடியும்.

அடிக்கடி மருந்தேற்ற வேண்டிய நோயாளிகளுக்கு இந்த உறையை நரம்பினுள் செலுத்தி அடிப்பாகத்தை (வாயை) ஒரு ரப்பர் மூடியால் மூடிவிடலாம். அடுத்து மருந்தேற்றும்போது ரப்பரை ஊசியால் துளைத்து உறை மூலம் ஏற்றலாம்.

உலோகத்தால் ஆன ஊசி நரம்பின் உள்பகுதியை ஒவ்வொரு முறையும் தொடுவதை இந்தப் பிளாஸ்டிக் உறை தவிர்க்கிறது. எனவே ஊசி ஏற்றப்படும் இடத்தில் தாங்க முடியாத அரிப்பு ஏற்படுவதும் இதனால் தவிர்க்கப்படுகிறது.

# மீனவர் துயர் துடைத்த செம்மல்

இலங்கையின் பழம் பெரும் சரித்திரத்திலேயே இடம் பெற்ற பெயர். பற்பல கப்பல்களைக் கண்டதுறை. ஆம் அதுதான் ஈழத்தின் வட நுனியாம் பருத்தித்துறை. இதுவே எனது தொகுதி.

ஆலமரத்துக்கு ஒரு விழுது என்றால் வீட்டுக்கு ஒரு தூண், நமது கட்சிக்குள் ஒரு இரத்தினம், இவர் தான் முன்னை நாள் நம் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரும், இம் முறை எமது கட்சி வேட்பாளருமான திரு. க. துரைரத்தினம். இவர் பிறர் நலனே தம் நலனைக் கருதி ஆரம்பத்தில் ஆசிரியராக கடமையாற்றினார். அதன் பின் ஏற்பட்ட அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியலில் இறங்கி மக்களுக்கு மேலும் நன்மைதேட முன் வந்தார். இவரது திறமையை, ஆற்றலை என்னவென்று கூறுவது. முடிவடைந்த இரு பாராளுமன்றத் தொடர்களிலும் அவர் ஆற்றிய சேவை அவரது ஆற்றலையும், திறமையையும் புலப்படுத்துகிறது.

சேரன் செங்குட்டுவன் வட நாடு சென்று கண்ணகிக்கு சிலை நாட்ட கல் கொண்டு வந்தான். நம் துரைரத்தினம் மீனவர் துயரம் நீக்க தென்னாடு சென்று மீண்டார். கோடிப் புயலிலே சிக்குண்ட மீனவர்களின் துயரம் காணவொண்ணாது, கொண்ட நாடு ஈழத்தைவிட்டு அண்டை நாடாம் நம் தீந்தமிழர் வாழும் தென்னாட்டுக் கரை தனுஷ்கோடிக்கு தீவிரமாக விரைந்து சென்றார். இது மற்ற எந்த அமைச்சர்களும் செல்லாத, செய்ய முன் வராத செய்கை.

இப்படியாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளை மூன்றையும் முன் வைத்து அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் மீண்டும் வேட்பாளராகப் பருத்தித்துறைத் தொகுதியில் எங்கள்முன் நிற்கின்றார். இம்மூன்றையும் அவர் இடதுசாரிகளையும், மற்றும் தடையாய் உள்ள கட்டைகளையும் தவிர்த்து வெற்றிவாகை சூடுவார் என்பதில் சந்தேகம் இல்லை.

—சி. சண்முகலிங்கம், பருத்தித்துறை.

## நாட்காட்டி வேண்டுமா?

இவ்வருட நாட்காட்டி இலவசமாக வேண்டுமா? அப்படியானால் பழைய பொருட்களுள்ள இடத்திற் தேடிப் பார்த்து, 1937-ம் ஆண்டுக்குரிய நாட்காட்டியை எடுத்தீர்களேயானால், நீங்கள் உண்மையில் கொடுத்து வைத்தவர்தான். பழைய நாட்காட்டிதானே! யாரும் சுலபமாகக் கொடுத்துவிடுவார்கள். 1937 என்ற எண்ணிற்கு மேல் 1965 என்று எழுதி ஒட்டுவதுதான் வேலை. அசல் 1965-ம் ஆண்டு நாட்காட்டி செலவின்றி (சிரமம் உண்டு) பெற்றுக் கொள்வீர்கள்!

அனுப்பியவர்:
—சி. சுந்தரராசா,




தனது நண்பர்கள் சிலரின் பெயர்களைக் கூவி இரைந்து கத்தினான். அவனுடைய குரலின் எதிரொலிதான் அத்தீவில் பயங்கரமாக எதிரொலித்தது. அவனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. சிறிது நேரம் என்ன செய்வதென்றறியாது விக்கி விக்கி அழுதான்.

"சுதந்திரமாகத் துள்ளித் திரிந்த குட்டி முயலை விரட்டியடித்ததன் பலன்தான் இது......எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்..."என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, மாணவர்கள் உணவு உண்ட ஆலமரத்தை நோக்கி மெதுவாக நடந்தான். அவனுடைய உள்ளம் சதா இறைவனையே பிரார்த்தித்துக் கொண்டிருந்தது.

அந்த ஆலமரத்தை அடைந்ததும்...'அன்று பகல் மாணவர்களுடன்சாப்பிட்ட காட்சியும், கும்மாளமடித்த காட்சியும் ஒருகணம் அவனுடைய மனத் திரையிலே தோன்றி மறைந்தன. உடனே தனது நண்பனொருவனின் பெயரை அவனையுமறியாது இரைந்து கத்தினான். அவனுடைய குரல் பயங்கரமாக எதிரொலித்ததைத் தவிர ஒரு பலனும் கிடைக்கவில்லை. அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது.

என்ன செய்வதென்றறியாது ஆலமரத்தைச் சுற்றிச் சுற்றி நடக்க ஆரம்பித்தான். அப்போது...அவனுடைய காலிலே ஏதோ தட்டுப்பட்டது. "கட்வுளே...!" என்று விம்மிக் கொண்டே குனிந்து அதை எடுத்தான். அது ஒரு இடியப்பப் பார்சல். அன்று பகல் மாணவர்கள் யாரோ தவறவிட்ட பார்சலாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணியபடி ஆண்டவனின் அருளை வியந்து பாராட்டிக் கொண்டான்.

ஆலமர அடிவேரொன்றில் அமர்ந்தபடி இடியப்பப் பார்சலைக் குலைத்து வயிறார உண்டான். குடிப்பதற்குத் தண்ணீருக்கு என்ன செய்வதென்றறியாது திகைத்த குகனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தென்பட்டது. உடனே...கடற்கரையை அடைந்து சிறிய மடுவொன்று தோண்டி அதில் ஊறிய நீரைக் குடித்தான். உடலில் ஓரளவு தென்பு ஏற்பட்டது. ஆனல் உள்ளத்தில்...?

விடுதியை அடைந்ததும் தன்னைக் காணவிட்டால் எப்படியும் திரும்பி வருவார்கள் என்ற எண்ணத்தில் சிறிது நேரம் கடற்கரையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். வெகு நேரமாகியும் அவர்கள் வருவதற்குரிய அடையாளம் தென்படவேயில்லை. அப்போது...!மழை இலேசாகத் தூற ஆரம்பித்தது.

கைகாவலுக்கு ஒருதடியை எடுத்துக் கொண்டு தனது கால் போன போக்கிலே எங்கோ நடந்து கொண்டிருந்தான். அப்போது நேரம் சுமார்...பனிரெண்டு மணி இருக்கும். அந்தஅகாலநேரத்திலேதான் நண்பர்கள் முன்பு எப்போதோ கூறிய பேய்க் கதைகளெல்லாம் அவனுடைய நினைவிற்கு வந்தன. அவனுடைய மனம் 'படக்படக்' என அடித்துக் கொண்டிருந்தது. பயத்தை மறைப்பதற்காக அவனுக்குத் தெரிந்த சில சினிமாப் பாடல்களை முணுமுணுத்தபடி நடந்து கொண்டிருந்தான். சற்றுத் தொலைவில் சில நரிகள் தொண்டை கிழியக் குரல் கிழப்பிக் கொண்டிருந்ததும், பக்கத்தில் ஒரு ஆந்தை அலறிய பயங்கரக் குரலும் அவனை அசைய முடியாதபடி செய்தன. குகன் அப்படியே அசையாத சிலைபோல நின்றான். அப்போது...மழை சற்றுப் பலத்துப் பெய்ய ஆரம்பித்தது. திடீரென்று மின்னிய மின்னலில் சற்றுத் தொலைவில் ஒரு பெரிய மலைக்குகையொன்று குகனின் கண்ணிலே பட்டது. உடனே ...... அக்குகையை நோக்கி ஓடினான். மலைக்குகையை நெருங்கி உள்ளே நுழைய முயன்றான்......அப்போது......!

உள்ளேயிருந்து விவரிக்க முடியாத பயங்கர ஒலிகள் சில கிழம்பிக் கொண்டிருந்தன. அப்போது மின்னிய மின்னலில் திடீரென்று குகையுள் பார்த்தான். உள்ளே...!மூன்று கரிய உருவங்கள் குந்திக்கொண்டிருப்பது பயங்கரமாகத் தெரிந்தது. "ஐயோ கடவுளே...!" என்று அவனையும் அறியாது இரைந்து கத்தினான். அடுத்த கணம்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னெடுங் காலமாய் பல்லாயிரம் இரசிகர்கள்
எதிர்பார்த்திருந்த பாங்கான ஓவியம்!
இதோ! உங்களை மகிழ்விக்க வந்து விட்டது!

கெப்பிட்டல் (கொழும்பு)
சபயர் (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) ராஜ் (நீர்கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
ஆகிய திரைகளில்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், (இரு வேடங்களில்)
இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர், பானுமதி, பத்மினி,
எம். என். ராஜம், தங்கவேலு, கிருஷ்ணன், மதுரம்
மற்றும் பலர் நடித்த



# ராஜா தேசிங்கு

கதை வசனம்: கண்ணதாசன்—மக்களன்பன் இசை: மறைந்த இசை மேதை ஜி. ராமநாதன்
பாடல்கள்: உடுமலை நாராயணகவி—கண்ணதாசன்—தஞ்சை ராமையாதாஸ்
டைரக்ஷன்: டி. ஆர். ரகுநாத்

2வது வெற்றி மாதம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
வெம்பிளி (கண்டி)
மற்றும் சில திரைகளில்
குடும்பப் பெண்களுக்கு வேண்டிய கருத்துக்கள் அடங்கிய

# கற்பகம்


ஜெமினி கணேசன், சாவித்திரி, விஜயா, பேபி ஷகிலா, ரங்கராவ் நடித்தது.
கதை-வசனம் - டைரக்ஷன்: கே. எஸ். கோபால கிருஷ்ணன்

இப்பொழுது......ஜனத்திரள் நிறைந்த 2வது வெற்றி வாரம்!
சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) சீகிரி (பண்டாரவளை) லிபேர்டி (ஹட்டன்)

"யோவ்! என்னு நீ பேசற?
வூட்லே உள்ளாங்களே இசுத்துக் குன்னு படத்தப் பாக்கப் போவியா!"
—வீரகேசரி



ஏழைப் பெண் வள்ளியாக வரும் சாவித்திரி......இவ்வளவு திறமையாக நடிக்கிறரே யென்று ரசிகர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் வகையில் மிகத் திறமையாகவும், மனதைத் தொடும் வகையிலும் நடித்துள்ளார்.
— தினகரன்



ஜெமினி கணேசன் சாவித்திரி — ராதா நடித்த

# ஆயிரம் ரூபாய்

வழக்கமாக நாகேஷ் ஒரு படத்தில் தோன்றுகிறர் என்றல், அது நகைச் சுவைப் பாத்திரமாகவே இருக்கும்!




'ஆயிரம் ரூபா'யில் நாகேஷ் புதுமையான பாத்திரத்தில் தோன்றி நடிக்கிறர். ஆனல், அவர் தமது ரசிகர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறர். தான் எவ்வளவு 'சீரியசா'ன 'ரோல்' செய்தாலும் ரசிகர்கள் சிரித்துக் கொண்டே யிருக்கிறர்களாம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
ரொக்ஸி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை)
ரீகல் (நீர்கொழும்பு) ரீகல் (கம்பளை) கிங்ஸ் (பதுளை)
ஆகிய திரைகளில்!

12-ம் திகதி வெள்ளி முதல்!

சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
சாவித்திரி, தேவிகா,
சந்திரபாபு, சந்திரகாந்தா,
எம். வி. ராஜம்மா, ரங்கராவ்
முதலியோர் நடித்த



# பந்த பாசம்

பின்னணி பாடியவர்கள்:
சிறினிவாஸ்—சுசீலா—ஜானகி
சவுந்தரராஜன்—சந்திரபாபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194-ம் இலக்கத்தில் 1965-ம் வருடம் மார்ச் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.